வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 07.08.2023 திங்கட்கிழமை | இதழ் : 240 | பக்கங்கள் : 16

## காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் 13ஐ நடைமுறைப்படுத்த வேண்டும்!

### ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்புவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு!

யாழ்ப்பாணம், ஓக. 07

காணி, பொலிஸ், நிதி, நிர்வாகம் உள்ளிட்ட முழுமையான அதிகாரங்களுடன் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்தும்படி ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்ப தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசியல் கட்சிகளின் அபிப்பிராயங்களை வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாக

15

## மாகாண, உள்ளூராட்சி தேர்தல்களில் ஒன்றையேனும் இந்த ஆண்டில் நடத்துக!

### மகிந்த தேசப்பிரிய வலியுறுத்து

கொழும்பு, ஓக. 07

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் நடத்தப்படாமை நாட்டின் ஜனநாயகத்துக்கு பெரும் பிரச்னையாகும் என எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய வலியுறுத்தி யுள்ளார்.

இந்த வருடத்தில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் இருந்து ஒரு தேர்தலையாவது நடத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உலக ஜனநாயக தினமான செப்ரெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னதாக ஒத்திவைக்கப்பட்ட இரண்டில் ஏதாவது ஒரு தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்ப்பதாக அவர் கூறினார்.

மக்கள் கட்டுப்பாடின்றி, ஆளுநர்கள், செயலர்கள்,

15

# மக்களின் சகல பிரச்னைகளுக்கும் இந்த பதவிக் காலத்துக்குள் தீர்வு!

## அனைத்து கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும் என்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, ஓகஸ்ட் 07

**“அனைத்து கட்சிகளும் எனக்கு ஆதரவு வழங்கினால் மக்கள் எதிர் நோக்கும் சகல பிரச்னைகளுக்கும் இந்த ஜனாதிபதி பதவிக் காலத்தில் தீர்வு காண்பேன்” - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றம் வந்துள்ள மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் சுயலாப அரசியலைக் கைவிட்டு மக்கள் நலன் கருதிச் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

குறுகிய வட்டத்துக்குள் இருந்துகொண்டு தீர்வு காண்பது தனது நோக்கம் அல்ல என்றும் பரந்துபட்ட கலந்துரையாடல்கள் மூலம் பிரச்னைகளை முடிவுக்குக் கொண்டுவரவே தான் விரும்புகிறார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய பிரச்னைகளுக்கு தீர்வு காண சர்வ கட்சி மாநாடு சிறந்த களம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## மரத்திலேறியவர் தவறிவீழ்ந்து பலி!

கிளிநொச்சி, ஓக. 07

தேங்காய் பறிப்பதற்காக தென்னை மரத்தில் ஏறியவர் தவறி விழுந்து உயிரிழந்தார்.

கிளிநொச்சி - முழங்காவில் - கிருஷ்ணன் கோயில் வீதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், முழங்காவில் - அன்புபுரத்தை சேர்ந்த கருணாகரன் ரூபன் என்பவரே உயிரிழந்தார்.

ஒருவரின் காணியில் தேங்காய் பறிப்பதற்காக மரத்தில் ஏறிய போதே அவர் தவறி விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

15

## அரசியல் தீர்வுக்கு வெளிநாடுகள் அழுத்தங்களை வழங்க முடியாது!

### பிரதமர் தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, ஓக. 07

அரசியல் தீர்வு விடயத்தில் வெளிநாடுகள் அழுத்தம் எதனையும் வழங்க முடியாது என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“இலங்கை இறைமையுள்ள ஒரு நாடாகும். இலங்கையின் உள்விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிட முடியாது. உள்நாட்டுப் பிரச்னைகளை நாமேதான் பேசித் தீர்க்க வேண் டும். வெளிநாடுகளை நாடுவதால்

15



## மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் மன்னாரில் மின் நிலையம் திறப்பு

மன்னார், ஓக. 07

மன்னார் மக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் காற்று மின்சக்தி நிலையத்தை மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நேற்று திறந்து வைத்தார்.

நானாட்டான் - நறுவிலிக்குளத்தில் ‘ஹிருரஸ் பவர்’ நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 15 மெகா

15

## இலங்கையில் நடந்தது இனப் படுகொலையே!

### இந்திய உள்துறை அமைச்சர்



சென்னை, ஓக. 07

இலங்கையில் நடந்தது இனப் படுகொலையே என இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இராமேஸ்வரத்தில் பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு தலைவரான அண்ணாமலை தலைமையில் “என் மண் என் மக்கள்” பாதயாத்திரையில் தொடக்க நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது ருவிற்றர்

15

## வருடத்தில் ஒருமுறையே இனிப் பரீட்சை நடக்கும்!



கொழும்பு, ஓக. 07

2024ஆம் ஆண்டு முதல் பாடசாலை தவணைப் பரீட்சைகளை குறைத்து வருடத்தில் ஒருமுறை மாத்திரம் பரீட்சையை நடத்த ஆலோசிக்கப்படுவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

15

## அனலைதீவுக்கு கற்களை ஏற்றி சென்ற படகு கவிழ்ந்தது!

### ஒருவர் மருத்துவமனையில்



யாழ்ப்பாணம், ஓக. 07

அனலைதீவுக்கு கொங்கிறீட் கற்களை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்த விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் ஆலய இறங்குதுறையில் இருந்து புறப்பட்ட சிறிது தூரத்திலேயே படகு பாரம் தாங்காமல் கவிழ்ந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்த விபத்தில் படகில் பணியாற்றும் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை கவிழ்ந்த படகு மீட்கப்பட்டது. (ஐ)

# இப்படியும் நடக்கிறது

துருக்கியில் வாழ்ந்த அறிஞர் முல்லா. ஒருநாள் காட்டு வழியாக வெளியூருக்குச் சென்று கொண்டிருந்தார். வழியில் ஒரு முரடனிடம் அவர் சிக்கிக் கொண்டு விட்டார்.

அந்த முரடனுக்கு முல்லாவைப் பற்றியும் அவருக்கு இருக்கும் புகழைப் பற்றியும் நன்றாகத் தெரியும்.

அவரை அவமானப்படுத்த எண்ணிய முரடன் தன் கைவாளை உருவிக் கொண்டு 'முல்லா அவர்களே உம்மைப் பெரிய மேதாவி என்றும் எவ்வளவு பெரிய ஆபத்து ஏற்பட்டாலும் உம்முடைய அறிவினாலேயே தப்பிப் பிழைப்பீர் என்றும் பேசிக் கொள்கிறார்களே அது உண்மைதானா?' என்று கேட்டான்.

'மக்களுக்குப் பொய் பேசத் தெரியாது. அவர்கள் உண்மையைத்தான் பேசுகிறார்கள்' என்றார் முல்லா.

'அப்படியானால் உமது அறிவுச் சாதுரியத்தை நிரூபித்துக் காண்பியும் பார்க்கலாம். இதோ இந்த உடைவாளால் உமது கழுத்தை வெட்டப் போகிறேன், உம்மால் தப்பிப் பிழைக்க முடியுமா ?' என்று முரடன் கேட்டான்.

'உம்முடைய கைவாளுக்குத் தப்பிப் பிழைக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை' என்று கூறிய முல்லா திடீரென வானத்தைப்பார்த்து விட்டு மகிழ்ச்சியுடன் சிரித்தார்.

'என்ன சிரிக்கிறீர்' என்று முரடன் கேட்டான்.

'அன்பரே, உமது கைவாள் எனது தலையைத் துண்டிக்கும் முன்பு அதோ வானத்திலே கண்களைப் பறிக்கும் அழகுடன் சிறகுகளை அசைத்துப் பறக்கும் அந்த விநோதமான தங்கப் பறவையை ஆசை தீரப் பார்த்து விடுகிறேன். அதற்குப் பிறகு நீர் எனது தலையை வெட்டி விடலாம்' என்றார் முல்லா.

'தங்கப் பறவையா வானத்தில் பறக்கிறது?' என்ற முரடன் வியப்புடன் ஆகாயத்தை அண்ணாந்து நோக்கினான்.

முல்லா திடீரென்று பாய்ந்து முரடன் கையிலிருந்த வாளைத் தட்டிப் பறித்து விட்டார்.

'நண்பனே, உம்முடைய உயிர் என் கையில் இருக்கிறது. நான் நினைத்தால் உமது தலையை வெட்டி வீழ்த்திவிட முடியும் ' என்றார் முல்லா.

தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு விரைவில் நடப்பதற்கான ஏற்பாடுகளை தமிழரசுக் கட்சி தொடங்கிவிட்டதாகத் தெரிகின்றது.

கடைசியாக இரண்டாயிரத்து பத்தொன்பதாம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டுக்கு பின்னர், இதுவரை மாநாடு எதுவும் நடைபெறவில்லை. அப்படி நடந்தால் தலைமைப் பதவியை கைப்பற்றவேண்டும் என்ற எண்ணத்தில் சிலர் தொடர்ந்து காய் நகர்த்தி வருகின்றனர். நீண்ட காலமாக மாநாடு நடக்கும் என்ற நம்பிக்கையே யாருக்கும் இருந்ததில்லை. எப்படியென்றாலும் அதனை தள்ளிப்போடவே முயற்சி எடுக்கப்படும் என்ற நம்பிக்கையே எல்லோரிடமும் இருந்தது.

ஆனால், இப்போது மாநாட்டுக்கான ஏற்பாடுகள் தொடங்கி விட்டன என்று தெரிகின்றது. அதற்காகவே இப்போது மாவட்ட கிளைகள், தொகுதிக்கிளைகள் என்று ஒவ்வொரு கிளைகளுக்கும் நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டு வருகின்றனர்.

மாநாட்டுக்கான ஏற்பாடுகள் தொடர்பான தகவல்களை அறிவதற்காக கட்சியின் முக்கியஸ்தர் ஒருவருடன் பேசியபோது அவர் சொன்ன தகவல் ஆச்சரியத்தைத் தந்தது.

வழக்கமாக மாநாடு நடக்கின்றபோதுதான் அதன் நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும். அதாவது அடுத்துவரும் ஆண்டுகளுக்கான தலைவர், செயலாளர் போன்ற பதவிகளுக்கான தெரிவு மாநாட்டில் நடைபெறும்.

ஆனால், நடக்கவிருக்கும் மாநாட்டுக்கு முன்னதாக ஒரு மாதத்துக்கு முதலிலேயே, தலைவர் தெரிவு செய்யப்பட்டுவிட வேண்டும் என்று புதிய யோசனையை முன்வைத்திருக்கிறாராம் தற்போதைய தலைவர். அதற்கு அவர் சொல்லியிருக்கின்ற காரணம்தான் அதிர வைக்கின்றது.

மாநாட்டில் தலைவர் 'தலைமை பேருரை' ஆற்ற வேண்டும் என்றும் அந்தப் பேருரையை தயார் செய்வதற்காக தலைவர் தெரிவு மாநாட்டுக்கு ஒரு மாதத்துக்கு முன்னதாகவே நடக்கவேண்டும் என்றும் யோசனை சொல்லியிருக்கிறாராம் தலைவர் மாவை சேனாதிராசா.

கடைசியாக நடந்த மாநாட்டில் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட தற்போதைய தலைவர் மாவை சேனாதிராசா, அந்த மாநாட்டில் தான் ஆற்றிய உரையை ஒரு கையேடாக அச்சிட்டு மாநாட்டில் தான் பேசிய பின்னர் மாநாட்டில் கலந்துகொண்டவர்களுக்கு விநியோகித்திருந்தார். அவர்தான் அந்த மாநாட்டில் தலைவராக தெரிவுசெய்யப்படுவார் என்பது முன்னதாகவே முடிவு செய்யப்பட்ட விடயமாகியிருந்ததால் அவர் அதனை தயாரித்து எடுத்து வந்திருந்தார். இதற்கு முன்னர் மட்டக்களப்பில் நடைபெற்ற கட்சி மாநாட்டிலும் சம்பந்தன் ஐயா தலைமைப் பேருரையை ஆற்றியது ஒரு பிரசுரமாக வெளிவந்திருந்தது.

அதேபோல அடுத்த மாநாட்டிலும் தலைவர் ஆற்றுகின்ற உரையை வெளியிட வேண்டும் என்றும் அதற்காகவே தலைவர் தெரிவு ஒரு மாதத்துக்கு முன்னதாக நடக்கவேண்டும் எனவும் யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கின்றதாம். இதிலிருந்து மாநாட்டில் தலைவர் தெரிவு யார் என்பது இன்னமும் நிச்சயமானதாக இல்லை என்பது தெரிகின்றது.

மாநாட்டுக்கு பொதுச்சபை உறுப்பினர்கள் பெரும்பாலானவர்கள் வருவார்கள். ஆனால், அதற்கு முன்னதாக ஒரு சிறிய கூட்டத்தைக் கூட்டி தலைவர் தெரிவை முடித்துவிட்டால் வசதியாக இருக்கும் என்று தற்போதைய தலைவர் நினைக்கிறார் போலும் என்றார் இந்த தகவலைச் சொன்ன தமிழரசுக்காரர்.

முல்லா அந்த முரடனிடமிருந்து தப்பித்ததுபோல, சமயோசிதமாக சிறிய கூட்டம் ஒன்றை கூட்டி தலைமையில் தொடர நினைக்கிறாரோ என்னவோ?

**- ஊர்க்குருவி.**

# யாழ்ப்பாணம் நகரில் நேற்று விழிப்புணர்வு நடைபயணம்!



யாழ்ப்பாணம், ஒக. 07

உள்ளூர் உற்பத்திகளை பெறுமதி சேர்க்கை ஊடாக மதிப்புக் கூட்டும் வகையிலான விழிப்புணர்வை சமூக மட்டத்தில் விதைக்கும் நோக்கிலும், உடல் - உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையிலும் கனடாவைத்' தளமாகக் கொண்டியங்கும் ஈ-குருவி அமைப்பின் ஏற்பாட்டில் "ஈ-குருவி நடை பயணம்- 2023" நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். நகரில் நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பொதுநூலக முன்றலில் நேற்று காலை - 07 மணியளவில் ஆரம்பித்த இந்த நடை பயணமானது ஆஸ்பத்திரி வீதியூடாகச் சத்திர சந்தியை அடைந்து, அங்கிருந்து யாழ்ப்பாணம் கோட்டை சுற்றுவட்ட வீதியூடாக மீண்டும் பொதுநூலகத்தை சென்றடைந்தது.

இந்த நடைபயணத்தில் சமூக மட்டப் பிரமுகர்கள், மாணவர்கள், இளைஞர், யுவதிகளென 300 இற்கும் மேற்பட்டவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

நடை பயணத்தில் கலந்துகொண்டவர்கள் அனைவருக்கும் ஈ-குருவி நடைபயணம் - 2023 எனும் பெயர் பொறிக்கப்பட்ட ரீசேர்ட் வழங்கி வைக்கப்பட்டதுடன் ஆரோக்கிய இலைக் கஞ்சியும், கடலையும் பரிமாறப்பட்டன. (ஐ)

# மருதகலை கலைமன்றத்தின் பௌர்ணமி விழா நடைபெற்றது



வடமராட்சி, ஒக. 07

வடமராட்சி கிழக்கு அம்பன் மருதகலை கலைமன்றத்தின் பௌர்ணமி விழா நேற்றுமுன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

அம்பன் பிங் பொங் விளையாட்டு கழக மைதானத்தில் மருதகலை கலைமன்ற தலைவர் கபில்ராம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதல் நிகழ்வாக மங்கல விளக்கு ஏற்றப்பட்டது. தொடர்ந்து அம்பன் பெரியதம்பிரான் பிள்ளையார் ஆலய குரு ஆசியுரை வழங்கினார்.

தொடர்ந்து சிறப்புரைகளை அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் சோ. வாகீசன், முன்னாள் வடமராட்சி கிழக்கு கலாசார உத்தியோகத்தர் செல்வசுகுணா ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து வரவேற்பு நடனம், பாட்டு, நடனம், கவிதை, கோலாட்டம், மிருதங்க இசை, நாடகம் உட்பட பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. (ரி-02)

# பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஒக. 07

மண்டைதீவு சிறுப்புலம் வைரவர் ஆலய பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளது.

சிறுப்புலம் ஞான கம்பளி வைரவர் கோயில் முன்றிலில் இந்த பொங்கல் விழா நடைபெறவுள்ளது. (ஐ)

# தந்தை தாக்கி மகன் பலி!

கொழும்பு, ஒக. 07

தந்தைக்கும் மகனுக்கும் ஏற்பட்ட பணப் பிரச்சினையில் மகனை தந்தை தாக்கிக் கொன்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குருநாகல் - மாஎலிய பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பண விடயத்தில் தந்தைக்கும் மகனுக்கும் ஏற்பட்ட தர்க்கம் மோதலாக மாறியது. இதில், தந்தை தனது மகனை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார். இதில் மகன் உயிரிழந்தார்.

23 வயது இளைஞரே இந்தத் தாக்குதலில் உயிரிழந்தார். 45 வயதான தந்தையை குருநாகல் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# வயாவிளான் மத்தியின் மாணவர்கள் ஒன்றுகூடல்



யாழ்ப்பாணம், ஒக. 05

வயாவிளான் மத்திய கல்லூரியின் 2005 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பில் கல்வி கற்ற மாணவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.நகரில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நேற்று முற்பகல் 11.30 மணி முதல் நடைபெற்ற இந்த சந்திப்பில் அனைவரும் பாடசாலை கால பசுமையான நினைவுகளை ஒருவருக்கொருவர் பரிமாறி மகிழ்ந்தனர்.

குறிப்பாக, வயாவிளான் மத்திய கல்லூரி இடம் பெயர்ந்து உரும்பிராயில் சிரமங்களுக்கு மத்தியில் இயங்கிய போதிலும் அக் காலத்தில், பதவி வகித்த நடராஜா மற்றும் கனகராசா ஆகிய அதிபர்களின் உயர்வான பணிகள் மற்றும் தமக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் வளப்பற்றாக் குறைகளுக்கு மத்தியிலும் அர்ப்பணிப்பான முறையில் கல்வி போதித்த நினைவுகளையும் இந்தச் சந்திப்பின் போது அவர்கள் நினைவு மீட்டனர்.

இந்த சந்திப்பில் தமிழ்ச் சமூகத்தின் தேவைகளை அறிந்து பயன்தரு பணிகளை முன்னெடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது. எதிர்காலத்தில் இது தொடர்பில் ஆக்கபூர்வமான செயல்பாடுகளை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, இந்த சந்திப்புக்கான முழுமையான நிதி அனுசரணையை புலம்பெயர்ந்து தற்போது லண்டனில் வாழ்ந்து வரும் 2005 ஆம் ஆண்டு உயர்தர மாணவி தாமாக முன்வந்து வழங்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
07.08.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பொலிஸ் அதிகாரம் இல்லாத மாகாண சபை

ரணில் விக்கிரமசிங்கவின் நகர்வுகள் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் அவர் கட்சிகளின் பரிந்துரைகளை கோருகின்றார். அவ்வாறான பரிந்துரைகள் அவசியமற்றது. ஏனெனில், ஏற்கனவே அரசமைப்பில் இருக்கின்ற விடயங்களை அமுல்படுத்துவதற்கு பரிந்துரைகள் தேவையற்றவை. 13இற்கு அப்பால் செல்வது தொடர்பில் பரிந்துரைகளை கோரினால் அதில் பொருளுண்டு.

இந்தப் பின்னணியில் 13இல் உறுதிப்படுத்தப்பட்ட விடயங்கள்கூட வெட்டிக் குறைக்கப்படலாமோ - என்னும் சந்தேகம் எழுகின்றது. இந்த விடயத்தை தமிழ் கட்சிகள் எந்தளவு புரிந்திருக்கின்றன - புரிந்திருந்தாலும்கூட அதற்காக எந்தளவு வினைத்திறனுடன் பணியாற்றுகின்றன - என்பது கேள்விக்குறியாகும். இவ்வாறானதொரு பின்புலத்தில் மக்கள் முறைப்பாட்டுக்கான வடக்கு, கிழக்கு சிவில் சமூகம் இந்த விடயத்திலுள்ள ஆபத்தை தெளிவாக அறிவுறுத்தியிருக்கின்றது.

இந்தியாவின் உறுதிமொழியின் அடிப்படையில்தான் தமிழ் விடுதலை இயக்கங்கள் தங்களின் ஆயுதங்களை ஒப்படைத்தன. 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழுள்ள பொலிஸ் அதிகாரம், தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்னும் உத்தரவாதம் அப்போதிருந்தது. எனினும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைமையிலான இணைந்த வடக்கு- கிழக்கு மாகாண சபை நிர்வாகம் செயலிழந்ததைத் தொடர்ந்து இந்த விடயம் சற்று பின்னுக்குச் சென்றது.

ஆனால், தற்போது, மீளவும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் பேசப்படுகின்ற சூழலில் ரணில் ஒரு புதிய பிரச்னையை ஏற்படுத்தியிருக்கின்றார். அதாவது, பொலிஸ் அதிகாரம் இல்லாத மாகாண சபை. இது மிகவும் சிக்கலானது. அண்மையில், குருந்தூர் மலை விவகாரத்தில் மத்திய அரசின் கீழுள்ள பொலிஸாரின் நடவடிக்கைகள் விமர்சிக்கப்பட்டன. மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரத்தின் அவசியத்தை உணர்த்தும் ஒரு சம்பவமாகவே அது அமைந்திருந்தது.

இவ்வாறானதொரு சூழலில், பெரும்பான்மையான கட்சிகள் நிராகரித்தால் பொலிஸ் அதிகாரத்தை இல்லாமல் ஆக்கலாம் என்னும் ஒரு புதிய நகர்வு மேலோங்கியிருக்கின்றது. ரணில் ஒரு விடயத்தை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றார். அதாவது, அனைவரும் ஆதரித்தால் 13இற்கு அப்பால் செல்வதில் தனக்கு பிரச்னையில்லை - அவ்வாறாயின் அதன் பொருள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவில்லையாயின் 13இற்கு அப்பால் செல்வதில்லை. அத்தோடு, அனைவரும் உடன்பட்டால் 13இல் குறைப்பையும் செய்யலாம் - அதிலும் தனக்கு ஆட்சேபனையில்லை என்பதுதானே! - இது மிகவும் ஆபத்தான நகர்வு. ரணில் ஒரு வேளை தென்னிலங்கையின் கடும்போக்கு தரப்புக்களை - பௌத்த பிக்குகளை திருப்திப்படுத்துவதற்காக பொலிஸ் அதிகாரத்தை இல்லாமலாக்கும் தீர்மானத்துக்கும் செல்லக்கூடும். இதன்மூலம் அவரது தேர்தல் வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ளவும் முயற்சிக்கலாம். இந்த நிலையில், இதனை தடுத்து நிறுத்துமாறு தமிழ் கட்சிகள் இந்தியாவிடம்தான் செல்ல வேண்டும். வேறு தெரிவுகள் இல்லை. ஏனெனில், இந்தியாவின் வேண்டுகோளுக்கு இணங்கவே, விடுதலை அமைப்புகள் ஆயுதங்களை கைவிட்டன. இப்போது, பொலிஸ் அதிகாரம் எக்காலத்திலும் தமிழ் மக்களுக்கு இல்லையென்றால் தமிழ் மக்களின்

பாதுகாப்பை எவ்வாறு உறுதிப்படுத்துவது? இந்தக் கேள்வியை இந்தியாவை தவிர வேறு எவரிடம் தமிழர்கள் கோர முடியும்?

# பொது மக்களுக்கு இடையூறு; நால்வர் யாழ். நகரில் கைது!

*யாழ்ப்பாணம், ஒக. 07*

யாழ்ப்பாணம் நகரில் பொதுமக்களுக்கு ஊதுபத்தி விற்பனை, சாத்திரம் கூறுதல் என்று இடையூறு ஏற்படுத்திய நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்தின் உத்தரவுக்கமைய மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழு இந்த கைது நடவடிக்கையை மேற்கொண்டது.

கைதானவர்களிடம் ஆள் அடையாளத்தை உறுதி செய்யக்கூடிய அடையாள அட்டையோ அல்லது ஆவணங்களோ இருக்கவில்லை. இவர்கள், வேறுபகுதிகளில் இருந்து தவறான நோக்கங்களுடன் வந்திருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

கைதானவர்கள் கொழும்பு, புத்தளம் பகுதியைச் சேர்ந்த ஆண்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். நகரில் ஊதுபத்தி விற்பனை, சாத்திரம் கூறுதல் என்ற பெயரில் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவர்களின் செயல்பாடுகளால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும் கூறப்பட்டது.

(ஐ-03)

# சீதுவையில் மறைத்து வைக்கப்பட்ட வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டன

*கொழும்பு, ஒக. 07*

களனிப் பிரிவின் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் குழுவினர் சீதுவை லியனகேமுல்ல பிரதேசத்தில் தோட்டத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த விமான எதிர்ப்பு தோட்டாக்கள், கைக்குண்டுகள், வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்களின் பாகங்களை மீட்டுள்ளனர்.

இரண்டு விமான எதிர்ப்பு தோட்டாக்கள், ஒரு கைக்குண்டு, ஒரு எல். எம். ஜி, இரண்டு வகையான வெடிபொருட்கள், துப்பாக்கியின் 17 பாகங்கள், ஒரு டெட்டனேட்டர் ஜெலற்றின் குச்சிகள் அடங்கிய வெடிபொருட்களை மீட்டுள்ளனர்.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த இடத்தில் தேடுதல் நடத்தப்பட்டு இவை மீட்கப்பட்டுள்ளன.

இவற்றை தோட்டத்தில் மறைத்து வைத்திருந்தவர்கள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

## கிளிநொச்சி விபத்தில் ஒருவர் பலி!

*கிளிநொச்சி, ஒக. 07*

கெப் ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் வேலு செல்வகுமார் (வயது - 40) என்பவரே உயிரிழந்தார்.

கிளிநொச்சியில் இருந்து அக்கராயன் நோக்கி பயணித்த கெப் ரக வாகனமும் எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுமே நேருக்கு நேர் மோதி இந்த விபத்து ஏற்பட்டது. இதில் படுகாயமடைந்த நபர் கிளிநொச்சி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

வாகன சாரதியை கைது செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பரிசளிப்பு விழா

*யாழ்ப்பாணம், ஒக. 07*

காங்கேசன்துறை நடேஸ்வர கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் "நடேஸ்வரன்" மலர் வெளியீடும் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கு. விமலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் க. ஜெ. பிறெட்லி கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக மருத்துவர் ஜெ. குணதீபன், கௌரவ விருந்தினராக வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அதிபர் கு. கிருஷ் ணலதா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# முகமூடி கொள்ளையர்கள் இரு வருடங்களின் பின் கைது!

*வடமராட்சி, ஒக. 07*

வடமராட்சி - அல்வாயில் இரு வருடங்களுக்கு முன்னர் கொள்ளையிட்ட முகமூடி கொள்ளை சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பருத்தித்துறை பொலிஸாரால் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.


கடந்த 2021 ஒக்ரோபர் 16ஆம் திகதி அல்வாயில் உள்ள வீடொன்றில் புகுந்த மூன்று முகமூடி கொள்ளையர்கள் நகை, பணம், கைபேசி என்பவற்றை கொள்ளையடித்து சென்றனர்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

மேலும், ஒரு சந்தேகநபர் தொடர்ந்தும் தலைமறைவாக உள்ள நிலையில் அவரைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ஐ-2)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஓகஸ்ட் - 07 திங்கட்கிழமை**
**சோபகிருது வருடம் - ஆடி 22**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 06.00 - 07.30 |
| ராகு காலம் | : | 07.30 - 09.00 |
| திதி | : | சப்தமி |




**மேடம்**
சில காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வாகனம் அடிக்கடி தொந்தரவு தரும். வியாபாரத்தில் லாபம் வரும். சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள். முன்னேறும் நாள்.

**இடபம்**
பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். சிந்தனைத் திறன் பெருகும்.

**மிதுனம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். உங்களின் ஆலோசனைகள் ஏற்கப்படும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கடகம்**
கணவன், மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மனஇறுக்கங்கள் உருவாகும். விமர்சனங்களைக் கண்டு அஞ்ச வேண்டாம். வியாபாரத்தில் லாபம் மந்தமாக இருக்கும். மேலதிகாரி குறை கூறுவார்.

**கன்னி**
விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை மதித்து பேசுவார். திறமைகள் வெளிப்படும் நாள்.

**துலாம்**
உறவினர் மத்தியில் அந்தஸ்து உயரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். உத்யோகத்தில் உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார். அமோகமான நாள்.

**விருட்சிகம்**
சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் திருப்திகரமான சூழ்நிலை உருவாகும். நினைத்தது நிறைவேறும்.

**தனுசு**
கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். புது வேலை அமையும். வியாபாரத்தில் உதவுவார்கள். அமைதி நிலவும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**மகரம்**
சொத்து வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். சில நுணுக்கங்களை கற்றுக்கொள்வீர்கள்.தைரியமாக சில முடிவுகள் எடுக்கும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும், கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

# மணிப்பூர் விவகாரத்தில் சர்ச்சையை ஏற்படுத்துவதே எதிர்க்கட்சிகள் நோக்கம்

## நிதி அமைச்சர் நிர்மலா குற்றச்சாட்டு

திருநெல்வேலி, ஓக. 07

“மணிப்பூர் விவகாரம் குறித்து பாராளுமன்றத்தில் விவாதிக்க எதிர்க்கட்சிகள் தயாராக இல்லை. இதில், சர்ச்சையை ஏற்படுத்துவதையே நோக்கமாக கொண்டு அரசியல் செய்கிறார்கள்”, என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

ஆதிச்ச நல்லூரில் நேற்றுமுன்தினம் அருங்காட்சியகத்தை திறந்து வைத்து ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “ஆதிச்சநல்லூர் உட்பட நாட்டிலுள்ள 5 இடங்களில் அருங்காட்சியகம் அமைக்க மத்திய அரசு ரூ. 2500 கோடி ஒதுக்கியுள்ளது. வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்ட சிலைகளை மீட்க பிரதமர் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். அவர் வெளிநாடுகளுக்கு செல்லும்போதெல்லாம் அந்தந்த நாடுகளை சேர்ந்த தலைவர்களிடம் இதுகுறித்து பேசி வருகிறார்.

மணிப்பூர் விவகாரத்தில் அனைவருக்கும் பொதுவான தீர்வை எட்டுவதற்கு நாடாளுமன்றத்தில் அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து அனைத்து எதிர்க்கட்சிகளின் தலைவர்களையும் அழைத்து பேசியிருக்கிறோம். இந்த விவகாரம் குறித்து பாராளுமன்றத்தில் விவாதிக்க அரசு தயாராக இருக்கிறது. மத்திய உள்துறை அமைச்சர் உரிய விளக்கம் அளிப்பார் என்று தெரிவித்திருக்கிறோம். ஆனால், அதற்கு எதிர்க்கட்சிகள் தயாராக இல்லை.

மணிப்பூரில் நடக்கும் சம்பவங்கள் இது முதல்முறையல்ல. இதற்குமுன் பலமுறை நடைபெற்றுள்ளது. அரசியல் பேசுவதாக நினைக்கக் கூடாது. பாராளுமன்றத்தில் அரசியல் செய்வதால் இதை நான் சொல்ல வேண்டியுள்ளது. மணிப்பூரில் 2013 ஆம் ஆண்டில் ஓராண்டுக்கு மேல் கலவரம் நடைபெற்றது - என்றார்.

அத்துடன், தமிழ்மொழி, கலாசாரத்தின்மீது பிரதமருக்கு தனி அக்கறை உள்ளது. அவரின் வழிகாட்டுதலின்படி அருங்காட்சியகங்கள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்கிறோம். பாரதத்தின் கலாசாரத்தை பாதுகாக்கும் நோக்கத்தில் பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்துகிறது - என்றும் கூறினார்.

(ஐ)

# ஹிந்தியை திணிக்கும் அரசின் முயற்சி வீழ்த்தப்படுவது உறுதி

## பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ்

சென்னை, ஓக. 07

“ஹிந்தியை எதிர்ப்பின்றி ஏற்கும் நிலையை ஏற்படுத்தும் மத்திய அரசு அரசின் முயற்சி வீழ்த்தப்படுவது உறுதி” என்று பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“இந்திய மக்கள் ஹிந்தியை ஏற்றுக்கொள்ளும் வேகம் குறைவாக இருந்தாலும்கூட, என்றாவது ஒருநாள் ஒட்டுமொத்த இந்தியர்களும் எந்த வித எதிர்ப்பும் இல்லாமல் ஹிந்தியை ஏற்றுக் கொண்டாகத்தான் வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறியிருக்கிறார்.

மத்திய உள்துறை அமைச்சரின் கருத்து ஹிந்தி மீதான அவரின் நம்பிக்கையைக் காட்டவில்லை. மாறாக, ஹிந்தி திணிப்பின் மீதான நம்பிக்கையையே காட்டுகிறது. ஹிந்தித் திணிப்பு முயற்சிகள் ஒருபோதும் வெல்லாது.

ஹிந்தியை ஏற்றுக்கொள்ள தமிழகம் உள்ளிட்ட ஹிந்தி பேசாத மாநிலங்கள் ஏங்கவில்லை. அவை எப்போதும் எதிர்ப்பு நிலையில்தான் உள்ளன. அத்தகைய சூழலில் அனைவரும் இந்தியை எதிர்ப்பின்றி ஏற்கும் நிலை வரும் என்றால், அத்தகைய நிலையை ஏற்படுத்த மத்திய அரசு திட்டமிடுகிறது என்றுதான் பொருள். கடந்த காலங்களில் அத்தகைய முயற்சிகள் எப்படி வீழ்த்தப்பட்டனவோ, அதைப்போலவே இனிவரும் காலங்களிலும் வீழ்த்தப்படும். இது உறுதி - என்றார்.

(ஐ)

# 1965 மொழிப் புரட்சி காலத்தை மீண்டும் உருவாக்கி விடாதீர்கள்!

## அமித் ஷாவுக்கு ஸ்டாலின் எச்சரிக்கை

சென்னை, ஓக. 07

1965 மொழிப் புரட்சிக் காலத்தை மீண்டும் உருவாக்கி விடாதீர்கள் என்று உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு முதல்வர் மு. க. ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“எதிர்ப்பின்றி அனைவரும் ஹிந்தியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் பேச்சு மற்ற மொழி பேசும் அனைத்து இன மக்களையும் ஹிந்திக்கு கொத்தடிமை ஆக்கும் எதேச்சாதிகார முயற்சியாகும். இதைக் கேட்டு நடக்க தமிழகம் தலையாட்டி பொம்மை மாநிலம் அல்ல!

தமிழகத்துக்கு வந்தால் தொன்மையான மொழி என்று நாக்கில் தேன் தடவுவதும், டில்லிக்கு சென்றதும் நஞ்சைப் பரப்புவதும் பா. ஜ. கவின் பசப்பு அரசியல் என்பதை அனைவரும் அறிவோம்.

ஹிந்தி திணிப்பை இப்போது மேற்கு வங்கமும் கர்நாடகமும் எனப் பல மாநிலங்களும் கடுமையாக எதிர்க்க தொடங்கி இருப்பதை அமித் ஷா உணர வேண்டும். 1965 மொழிப்புரட்சிக் காலத்தை மீண்டும் உருவாக்கி விடாதீர்கள் என எச்சரிக்கிறேன்!” - இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

(ஐ)

# அ. தி. மு. கவில் இணைய 2.44 கோடி பேர் விண்ணப்பம்!

## எடப்பாடி பழனிசாமி

சென்னை, ஓக. 07

அ. தி. மு. கவில் சேர 2.44 கோடி பேர் விண்ணப்பித்துள்ளதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், “அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் தங்களுடைய பதிவை புதுப்பித்துக் கொள்வதற்கும், புதிய உறுப்பினர்களை சேர்ப்பதற்குமான விண்ணப்பப் படிவங்கள் தலைமைக் கழகத்தில், 5.4.2023 முதல் விநியோகிக்கப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 4.5.2023 முதல் பெறப்பட்டு வருகின்றன.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் 2 கோடி உறுப்பினர்களை சேர்த்திட வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்து செயல்பட்டு வந்த நிலையில், தற்போது வரையில் 2 கோடியே 44 ஆயிரத்து 400 பேர் உறுப்பினர்களாக சேர்வதற்கு விண்ணப்பித்துள்ளனர் - என்றார்.

(ஐ)

# வறட்சி காலநிலையால் 90 ஆயிரம் பேர் பாதிப்பு

## - யாழில் 70 ஆயிரம் பேர் பாதிப்பு-

கொழும்பு, ஓக. 07

**நிலவும் வறட்சியான காலநிலையால் வடக்கு, கிழக்கு உட்பட 4 மாகாணங்களில் 90 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.**

கிழக்கு, வடக்கு, வடமேற்கு, சப்ரகமுவ மாகாணங்களின் 5 மாவட்டங்களைச் சேர்ந்த 18 பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 27 ஆயிரத்து 885 குடும்பங்களைச் சேர்ந்த 89 ஆயிரத்து 485 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிகளவானோர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளில் 21 ஆயிரத்து 714 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 113 பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# வறட்சியால் பாதிக்கப்பட்டோருக்கான அரசின் திட்டங்களை அறிவியுங்கள்!

## நாமல் ராஜபக்ஷ கேட்கிறார்

கொழும்பு, ஓக. 07

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் தண்ணீருக்காக காத்திருக்கும் விவசாயிகளுக்கும் ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையின் நிலைப்பாடு மற்றும் வேலைத்திட்டம் குறித்து அறிவிக்கப்பட வேண்டும் என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிங்கிரிய பிரதேச சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், வறட்சியால் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக தென் மாகாணம், வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேற்கு விவசாயிகள் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள விவசாயிகள் இந்த வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரணம் குறித்து ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையிடம் நேரடியாகக் கேட்க விரும்புகின்றோம்.

மேலும் காலநிலை மாற்ற மாநாட்டில் ஜனாதிபதி கலந்து கொண்டார். அந்த மாநாட்டில் உள்ள நாடுகளுடன் நல்லுறவை கொண்டுள்ளோம். தற்போது அந்த நாடுகளிடம் இருந்து எவ்வாறான உதவிகளை பெறமுடியும் என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

அதேபோன்று நான் எதிர்க்கட்சித் தலைவருக்கும் தோழர் அநுர திஸநாயக்கவுக்கும் கூறுகின்றேன், இந்தப் பிரச்னையை



விமர்சனமின்றி எதிர்கொள்ள நடைமுறை மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறையை நாம் மேற்கொள்ள வேண்டும்.

எனவே, நாம் அனைவரும் ஒன்றிணைந்து, நீர் மேலாண்மை, மின் உற்பத்தி மற்றும் விவசாயிகளின் அறுவடையை வெற்றிகரமாகச் செய்ய நடைமுறை திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் - என்றார். (ஐ)

# வாள்களுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 07

வீட்டு சுவாமியறையில் 2 வாள்களை வைத்திருந்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, கோண்டாவில் மேற்கு, புகையிரத நிலைய வீதியில் உள்ள வீடொன்றில் வைத்து இளைஞன் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் நேற்று முன்தினம் மாலை 6 மணி அளவில் வீட்டை சோதனையிட்டு, சுவாமியறையில் வைக்கப்பட்டிருந்த 2 வாள்களையும் மீட்டனர்.

கைது செய்யப்பட்ட இளைஞன், மேலதிக விசாரணைகளுக்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைதான இளைஞனிடம் நடத்தப்பட்ட விசாரணையில், சுமார் 5 வருடங்களுக்கு முன்னர் கோண்டாவில் கிழக்கு ஐயப்பன் ஆலய வருடாந்த உற்சவத்தின் சமய சடங்குகளுக்காக மேற்படி வாள்களை கொள்வனவு செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# விபத்தில் படுகாயமடைந்த பல்கலை. மாணவன் மரணம்!

யாழ்ப்பாணம், ஓக. 07

வீதி வித்தில் சிக்கி படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த யாழ். பல்கலைக்கழக மாணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்த பல்கலைக்கழக மாணவன் நுவரெலியாவைச் சேர்ந்த க. பிரதீசன் (வயது-22) என்பவராவார்.

இந்த விபத்து யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி சந்தியில் கடந்த வியாழக்கிழமை மோட்டார் சைக்கிள் - வான் மோதி ஏற்பட்டிருந்தது.

மோட்டார் சைக்கிளில் சென்ற மாணவன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு வெள்ளிக்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

விபத்துக் குறித்து யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வறட்சியால் குழந்தைகளிடையே பல்வேறு நோய்கள் பரவுகின்றன

## மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 07

தற்போது நிலவும் வறண்ட காலநிலையால் குழந்தைகள் மத்தியில் பல்வேறு நோய்கள் பரவுகின்றன என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

நீர்ச்சத்து குறைபாடு போன்ற நிலைமைகள் இன்றைய நாட்களில் சர்வ சாதாரணமாக காணப்படுகின்றன. எனவே, குழந்தைகளுக்கு அதிகளவு திரவ உணவுகளை குடிக்க கொடுக்க வேண்டும் எனவும் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

வறண்ட காலநிலையுடன் குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு காய்ச்சல் போன்ற நோய்களும் பரவக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ஐ)

# போதை, பாதாள குழுவை கட்டுப்படுத்த விசேட குழு

கொழும்பு, ஓக. 07

போதைப்பொருள் மற்றும் பாதாளக் குழுக்களின் செயல்பாடுகளை கட்டுப்படுத்த முன்னெடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய 8 பேர் அடங்கிய விசேட பொலிஸ் அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் உத்தரவுக்கமைய இந்த விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் மற்றும் பாதாளக் குழுக்களின் செயல்பாடுகளை கட்டுப்படுத்த எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் குறித்து பொலிஸ் தலைமையகம் மற்றும் அமைச்சுக்கு அறிக்கை சமர்பிக்க மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் இந்த 8 பேர் அடங்கிய விசேட பொலிஸ் அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக மேல் மாகாணத்துக்கான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் டி.எம். டபிள்யூ.டி தென்னகோன், வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே. பி.எம்.குணரத்ன, தென் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.சி. மெதவத்த, சிறப்பு அதிரடிப்படை கட்டளை அதிகாரி டபிள்யூ. எஸ். இ. ஜெயசுந்தர, குற்றப் புலனாய்வுத் திணைக்கள பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.பி. ரணசிங்க, போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒஷான் ஹேவாவிதாரண மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் டி.சி.ஏ. தனபால, கொழும்பு குற்றப் பிரிவு பணிப்பாளர் என். சில்வா ஆகியோர் இந்த குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

# கஞ்சா கடத்தியவர்களை மடக்கிப் பிடித்த மக்கள்!

## பொன்னாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 07

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை பகுதியில் வைத்து கேரள கஞ்சாவுடன் 31 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை வட்டுக்கோட்டை மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

எழுதுமட்டுவாழ் பகுதியை சேர்ந்த இருவர் உட்பட மூவர் இவ்வாறு கஞ்சாவை எடுத்துச் செல்லும்போது, சந்தேகத்துக்கிடமான முறையில் வீதியில் சென்ற வாகனத்தை வட்டுக்கோட்டை - பொன்னாலை பகுதி மக்கள் வழிமறித்து சோதனையிட்டனர்.

இதன்போது வாகனத்தில் 227 கிலோ 918 கிராம் எடையுள்ள



கஞ்சா இருப்பது அவதானிக்கப்பட்டது. இதன்போது வாகனத்தில் இருந்த எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்த இருவர் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், அவ்வழியே வந்த கடற்படையினருக்கு மக்கள் விடயத்தை தெரியப்படுத்தினர். அவர்கள் கஞ்சா பொதிகள் மற்றும் வாகனம் என்பவற்றுடன் சந்தேக நபரை கைது செய்து வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வட்டுக்கோட்டை பகுதி மக்களின் இந்த துணிகரமான செயல்பாட்டை பலரும் பாராட்டி வருகின்றனர். (ஐ)

# மோட்டார் சைக்கிள் விபத்து; வரணியில் இருவர் படுகாயம்!

வடமராட்சி ஓக. 07

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணி, கறுக்காய் பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் நடந்து சென்ற வயோதிபர் மீது மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த இருவரும் ஆபத்தான நிலையில் 1990 அம்புலன்ஸ் மூலமாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ-02)

# தண்ணிமுறிப்பு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு

முல்லைத்தீவு, ஓக. 07

**முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குளப் பகுதியில் ஹன்ரர் வாகனத்தில் வந்த இராணு வத்தினர் சட்ட விரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டனர். இந்த நடவடிக்கைக்கு பொலிஸார் துணை போகின்றனரா என்று சமூக செயல்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

நேற்று முன்தினம் நடந்த சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தண்ணிமுறிப்பு குளத்தில் அத்துமீறி மீன்பிடி நடப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இதையடுத்து, முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும் நானும் அவ்விடத்துக்கு சென்றோம். அப்போது, இராணுவத்தினர் மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த னர்.



தண்ணிமுறிப்பு - குருந்தூர் மலை பகுதியில் பாதுகாப்பு கடமையில் நிற்கும் இரு பொலி ஸார் மண் அகழ்வை வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றனர். இராணுவத்துக்கு ஒரு சட்டம், மக்களுக்கு இன்னொரு சட்டமா? பொலிஸாரும் இந்த சட்ட விரோத மணல் அகழ்வுக்கு உடந்தையாக செயல்படுகின்ற னர் என்று அவர் குற்றஞ்சாட்டி னார். (ஐ)

# சச்சின் டெண்டுல்கர் இலங்கை வருகிறார்

கொழும்பு, ஓக. 07

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவரும் வீரருமான சச்சின் டெண்டுல்கர் நாளை இலங்கை வருகிறார்.

யுனிசெவ் அமைப்பின் தெற் காசியாவிற்கான பிராந்திய தூது வராக செயல்படும் அவர் கொழும்பு சினமன் லேக்சைட் டில் நடைபெறவுள்ள நிகழ் வொன்றில் கலந்து கொள்வதற் காக இலங்கை வருகிறார்.

கோவிட்-19 தொற்று நோயின் தாக்கம் மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளா தார நெருக்கடி தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள சிறுவர்க ளின் வாழ்க்கையில் ஏற்படுத்தி யுள்ள தாக்கத்தைப் வெளிச்சம் போட்டுக் காட்டுவதே இந்த நிகழ்வின் நோக்கமாகும்.

சுகாதாரம், கல்வி மற்றும் பாதுகாப்பு போன்ற துறைகளில் சிறுவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் தீவிரமாக செயல்படும் யுனிசெவ்திட்டங்க



ளில், பிராந்தியத் தூதுவர் எனும் வகையில் சச்சின் முன்னின்று செயல்படுகிறார். இதற்காகவே அவர் இலங்கை வருகிறார் என் பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# டிக்கோயா மருத்துவமனையின் பற்சிகிச்சை பிரிவு மூடப்பட்டது

கொழும்பு, ஓக. 07

ஹற்றன் - டிக்கோயா ஆதார மருத்துவமனையில் பற்சிகிச்சை பிரிவு மருத்துவர்கள் இன்மை யால் சுமார் 4 மாதங்களாக மூடப்பட்டுள்ளது. இதனால், நோயாளர்கள் பெரும் சிரமங்க ளுக்கு உள்ளாகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அனைத்து வசதிகளையும் கொண்டுள்ள டிக்கோயா ஆரம்ப மருத்துவமனையின் பற்சிகிச் சைப் பிரிவில் கடமையாற்றிய மருத்துவர்கள் இருவர் 4 மாதங் களுக்கு முன்னர் வெளிநாடு சென்றுள்ளனர்.

அதன்பின்னர், இந்த சிகிச்சை பிரிவுக்கு தற்காலிகமாக நியமிக் கப்பட்டிருந்த பெண் மருத்துவ ரும் மகப்பேறு விடுமுறையில் சென்றுள்ளார். இதையடுத்தே இந்த சிகிச்சை பிரிவு தற்போது மூடப்பட்டுள்ளது.

இது குறித்து நுவரெலியா மாவட்ட சுகாதார சேவை பணிப் பாளர் நிஸங்க விஜயவர்த்தன இதுகுறித்து தெரிவிக்கையில் :

பற் சிகிச்சை பிரிவு மூடப்பட் டுள்ளமை தொடர்பில் மருத்து வமனையிலிருந்து பல முறைப் பாடுகள் கிடைத்துள்ளன குறித்த மருத்துவமனைக்கு அவிசாவளை ஆதார மத்துவமனையின் பற்சி கிச்சை பிரிவில் கடமையாற்றும் மருத்துவர் ஒருவர் டிக்கோயா மருத்துவமனைக்கு இணைக்கப் பட்டிருந்தாலும் குறித்த மருத்து வமனையின் பணிப்பாளர் அவரை விடுவிக்காமையால் அவர் தற்போது வரை டிக்கோயா ஆதார மருத்துவமனைக்கு கட மைகளுக்காக சமுகமளிக்க வில்லை என தெரிவித்துள்ளார். (ஐ)

# கண் வில்லை இறக்குமதி மோசடி; விசாரணைகள் ஆரம்பமாகின!

கொழும்பு, ஓக. 07

கண் வில்லைகளை இறக்கு மதி செய்ததில் 10 கோடி ரூபாய்க் கும் அதிகமாக முறைகேடு இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கணக் காய்வு திணைக்களமும் விசார ணைகளை ஆரம்பித்துள்ளது.

குற்றப் புலனாய்வு திணைக் களமும் இது தொடர்பான விசா ரணைகளை முன்னெடுத்து வரு கின்றது என்று தெரிவிக்கப்படு கிறது.

நாட்டுக்கு ஒரு இலட்சம் கண் வில்லைகள் இறக்குமதி செய்யப்பட்டன. இதன் மூலம் சுமார் 10 கோடி ரூபாய் நிதி முறைகேடு இடம்பெற்றது என்று குற்றச்சாட்டு முன்வைக் கப்பட்டது.

மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான மருத் துவர்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ அண் மையில் இது தொடர்பில் வெளிப்படுத்தி குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

அதன் பின்னர் சுகாதார அமைச்சரின் ஆலோசனைக்கு அமைய, சுகாதார செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

மருத்துவர் சமல் சஞ்சீவ குற் றப் புலனாய்வுத் திணைக்களத் தில் சமர்ப்பித்த முறைப்பாட் டில் குறைந்த விலையில் கண் வில்லைகளை வழங்குவதற்கான விலைமனு கோரலுக்கு பதிலாக அதிக விலையில் வாங்குவதற்கு சுகாதார அமைச்சின் செயலா ளர் கொள்வனவு குழுவிற்கு விசேட அனுமதியொன்றை வழங்கியுள்ளதாக குறிப்பிடப் பட்டுள்ளது.

எவ்வாறாயினும், சில தரப்பி னரால் முன்வைக்கப்பட்ட இந் தக் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்துமாறு கணக் காய்வாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய தெரிவித்தார். (ஐ)

# வடக்கு, கிழக்கு இணைப்பு, சமஷ்டி ஒருபோதும் கிடைக்கப்போவதில்லை!

கொழும்பு, ஓக. 07

"வடக்கு - கிழக்கு இணைப் புக்கும் சமஷ்டி தீர்வுக்கும் இங்கு ஒருபோதும் வாய்ப்பில்லை. தமிழர்களுக்கு வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டித் தீர்வை இந்தியா தரும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வர் சம்பந்தன் கனவு காண்கின் றார்."

- இவ்வாறு சிறீ லங்கா பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரி வித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 36 வருடங் கள் நிறைவடைந்துள்ளன. அந்த ஒப்பந்தத்தை இனியும் தூக்கிப் பிடித்துக்கொண்டு துள்ளுவதில் எந்தப் பயனும் இல்லை.

தமிழர்களுக்கு இந்தியா ஒரு போதும் தீர்வை வழங்கமாட் டாது. ஆனால், தீர்வை இந்தியா வழங்கும் என்ற கனவுடன் பிரத மர் நரேந்திர மோடிக்குச் சிறு பிள்ளைத்தனமாகக் கடிதம் எழு துகின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம் பந்தன். வடக்கு - கிழக்கு இணைப் புக்கும் சமஷ்டி தீர்வுக்கும் இங்கு ஒருபோதும் வாய்ப்பில்லை." - என்றார். (ஐ)

# கொத்மலை நீர்த் தேக்கத்திலிருந்து மகாவலி பகுதிகளுக்கு தண்ணீர்!

கொழும்பு, ஓக. 07

கொத்மலை நீர்த்தேக்கத்தில் இருந்து 2000 ஏக்கர் அடி தண் ணீரை மகாவலி பகுதிகளுக்கு விடுவிக்க இலங்கை மகாவலி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது, தண்ணீர் பற்றாக் குறையை எதிர்நோக்கும் கலா வாவி, நாச்சதுவ மற்றும் தம்புலு ஓயா ஆகிய பகுதிகளுக்கு நீர் திறந்து விடப்படவுள்ளதாக இலங்கை மகாவலி அதிகார சபையின் பிரதி பணிப்பாளர் நாயகம் நிலந்த தனபால தெரி வித்துள்ளார்.

பொல்கொல்லயிலிருந்து போவதென்ன வரை சுரங்கப் பாதை ஊடாக தண்ணீர் கொண்டு செல்லப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, சிறுபோகத் திற்காக விடுவிக்கப்படும் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு விவசாயிகளை கேட்டுக்கொள் வதாகவும் அவர் கூறினார். (ஐ)

வங்குரோத்துக்கு காரணமானோர் குறித்து:

# சாட்சிய பட்டியலை தயாரிக்குமாறு பல்கலைக்கழகங்களுக்கு ஆலோசனை

கொழும்பு, ஓக. 07

நாட்டின் வங்குரோத்து நிலைக்கு காரணமான நிறுவ னங்கள் மற்றும் நபர்கள் மற்றும் அவர்கள் சார்பாக சாட்சியம ளிக்கக்கூடிய நபர்களின் பட்டி யலைத் தயாரிக்குமாறு பல்க லைக்கழகங்களின் பொருளியல் துறை தலைவர்களுக்கு ஆலோ சனை வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் வங்குரோத்து நிலைக்கான காரணங்களைக் கண்டறிய நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற சிறப்பு குழுவுக்கு பல்கலைக்கழகங்களின் பொரு ளியல் துறை தலைவர்கள் அழைக் கப்பட்டபோதே இந்த ஆலோ சனை வழங்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறான தொரு நிலை ஏற்படாமல் தடுப் பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் முன்னுரிமை ஆவணம் ஒன்றைத் தயாரிக்குமாறு ஆலோசனை வழங்கியதாக விசேட குழுவின் தலைவர் சட்டத்தரணி சாகர காரியவசம் குறிப்பிட்டார்.

அந்த அறிக்கைகளை ஒரு வாரத்துக்குள் வழங்குமாறும் பல்கலைக்கழக பொருளியல் துறை தலைவர்களுக்கு அறிவு றுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# வகுப்பாசிரியரால் மாணவி வன்புணர்வு

கொழும்பு, ஓக. 07

வகுப்பாசிரியரால் தான் வன் புணர்வு செய்யப்பட்டதார் 19 வயது மாணவி ஒருவர் செய்த முறைப்பாட்டையடுத்து குருநா கல் கட்டுபொத்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர்.

இந்த சம்பவத்தையடுத்து மாணவி சில மருந்து வில்லை களை உட்கொண்டதால் மருத் துவமனையில் சேர்க்கப்பட்டுள் ளார்.

சியம்பலாவை பகுதியைச் சேர்ந்த குறித்த மாணவி தரம் 13 இல் கல்வி கற்பவர் எனவும் தற் போது மேலதிக சிகிச்சைகளுக் காக அவர் குளியாப்பிட்டி மருத் துவமனைக்கு மாற்றப்பட்டுள் ளார் என்றும் பொலிஸார் தெரி வித்தனர்.

தான் கடந்த ஜூலை மாதம் 23 ஆம் திகதி தனது ஆசிரியரால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட் டதாக மாணவி தனது முறைப்பாட் டில் தெரிவித்துள்ளார். பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# நடைபவனி வந்த மலையக மக்களுக்கு மிகிந்தலை மக்கள் பெரும் வரவேற்பு!

கொழும்பு, ஒக. 07

'வேர்களை மீட்டு உரிமை வென்றிட' எனும் தொனிப் பொருளில் முன்னெடுக்கப்பட்டு வரும் மலையக மக்களின் எழுச்சிப் பயணத்தின் பத்தாம் நாள் நடைபவனி நேற்று ஞாயிற்றுக் கிழமை மதவாச்சியில் ஆரம்பமாகி மிகிந்தலையை அடைந்தது. இதன்போது சர்வ மத தலைவர்களும் அவர்களை வரவேற்று ஆசி வழங்கினர்.

மேலும், இக்கிரிகொல்லேவ பகுதியில் முஸ்லிம் மக்கள் மலையக மக்களை வரவேற்று உபசரித்ததோடு, மலையக மக்களின் நலன் வேண்டி பிரார்த்தனை செய்தனர்.

அத்தோடு, ரம்பேவ பிரதேச செயலக வளாகத்திலும் மலையக மக்கள் வரவேற்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ரம்பேவ பகுதியைச் சேர்ந்த மக்கள் நடைபவனி வந்தவர்களை உபசரித்ததை தொடர்ந்து, அங்கே பாடசாலை மாணவர்களுக்கு நடைவனி தொடர்பில் தமது அனுபவங்களை பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மலையகம் 200 நிகழ்வை முன்னிட்டு தலைமன்னார் முதல் மாத்தளை வரையான நடைபவனி நிகழ்வு கடந்த ஜூலை 28ஆம் திகதி வெள்ளிக் கிழமை தலைமன்னாரில் ஆரம்பமானது. இந்தப் பேரணி எதிர்வரும் 12ஆம் திகதி மாத்தளையை அடையவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக சமல் ராஜபக்ஷவை களமிறக்க தீர்மானம்?

## கட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் அதிகரிப்பு



கொழும்பு, ஒக. 07

**2024 முதல் காலாண்டில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ளமை குறித்து தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், ஆளும் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் கருத்து முரண்பாடுகள் மேலோங்கியுள்ளன.**

அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக சமல் ராஜபக்ஷவை நிறுத்துவதற்கு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளக முரண்பாடுகள் மேலோங்கியுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த தேர்தலில் போட்டியிட வைப்பதனால் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் எதிர்காலம் பாதுகாக்கப்படுவதுடன் மக்களின் பொருளாதார எதிர்பார்ப்புகளையும் ஈடுசெய்ய முடியும் என்று ஆளும் கட்சியின் ஒருதரப்பு கூறுகிறது.

இதனை நிராகரிக்கும் வகையில் 2024ஆம் ஆண்டு வரை மாத்திரமே தற்காலிக ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்கவுக்கு பதவி வழங்கப்பட்டுள்ளது என்றும் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவார் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன மற்றும் கலாநிதி ரஞ்சித் பண்டார ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில், ஆளும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள இந்த கருத்து முரண்பாடுகளை தவிர்க்க பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும், அவை சாத்தியப்படாத நிலையில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கலந்துரையாடலை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனை மையப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கடந்த வாரத்தில் பஸில் ராஜபக்ஷ சந்தித்திருந்த போதிலும் இறுதி தீர்மானம் எடுக்கப்படவில்லை.

ஜனாதிபதி தேர்தலையா அல்லது பாராளுமன்ற தேர்தலையா முதலில் வைப்பதற்கு உத்தேசித்துள்ளீர்கள் என்று ஜனாதிபதியிடம் பஸில் ராஜபக்ஷ வினாவியிருந்த போதிலும், அதற்கும் உறுதியான பதிலை அளித்திருக்கவில்லை. எனினும், ஆளும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளையும் பிளவுகளையும் பஸில் ராஜபக்ஷ ஜனாதிபதியிடம் எடுத்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரூ. 50 கோடி மதிப்பான பழுதடைந்த உணவு பொருட்கள் மீள்பொதியிட்ட நிலையில் மீட்பு

கொழும்பு, ஒக. 07

50 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான நுகர்வுக்கு பொருத்தமற்ற அரிசி, கோதுமை மா உள்ளிட்ட உணவுப் பொருட்கள் இருந்த களஞ்சிய சாலையை நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகள் சுற்றி வளைத்தனர்.

வத்தளை, ஹெந்தலையில் உள்ள களஞ்சியசாலையில் மனித பாவனைக்கு பொருந்தாத சுமார் 80,000 றின் மீன்கள் மீள்பொதி செய்யப்பட்டு சந்தைக்கு விநியோகம் செய்யப்பட உளடளர் என்று கிடைத்த தகவலை அடுத்தே இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன் பிரகாரம், நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் அவசர சோதனை பிரிவு அதிகாரிகள் நேற்று முன்தினம் மாலை குறித்த களஞ்சிய சாலைக்கு சென்று இந்த சுற்றிவளைப்பை நடத்தினர்.

இறக்குமதி செய்யப்பட்ட காலாவதியான பாசுமதி உள்ளிட்ட பல்வேறு வகையான அரிசி வகைகள், கோதுமை மா மற்றும் பல்வேறு உணவுப் பொருட்கள் மீளப் பொதியிடப்பட்டு சந்தைக்கு அனுப்பத் தயாராக இருப்பது கண்டறியப்பட்டது.

கைப்பற்றப்பட்ட உணவுப் பொருட்களின் பெறுமதி 50 கோடி ரூபாய்க்கும் அதிகமாகும் எனவும் இதுவரையில் அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய சோதனை நடவடிக்கை இது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அந்தக் களஞ்சியசாலைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நாமல் குமாரவை தாக்கிய தந்தையும் மகனும் கைது!

கொழும்பு, ஒக. 07

ஊழல் எதிர்ப்பு முன்னணியின் தலைவர் நாமல் குமாரவை தாக்கி அவரிடமிருந்து 60 ஆயிரம் ரூபாய், கைபேசி என்பவற்றை பறித்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வரக்காபொல பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் தந்தையும் மகனும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நாமல் குமாரவின் மனைவி பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, சந்தேகத்தின் பேரில் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இலங்கையின் கப்பல் கட்டுமானத்துக்கு பிரான்ஸ் முழு ஒத்துழைப்பு அளிக்கும்!

## பிரான்ஸ் ஜனாதிபதி உறுதியளித்தார்


கொழும்பு, ஒக. 07

கப்பல் கட்டுமான துறையை மேம்படுத்துவதற்கான அனைத்து ஒத்துழைப்புகளையும் இலங்கைக்கு வழங்கவுள்ளதாக பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

இலங்கை வருகையின் போது இரு தரப்பு உறவுகள் குறித்து பலதரப்பட்ட கலந்துரையாடல்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் முன்னெடுத்திருந்த நிலையில், கப்பல் கட்டுமான துறையை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்புகளுக்கும் அவர் உறுதியளித்துள்ளார் என்று தெரிய வருகின்றது.

கப்பல் கட்டுமான துறையில் உலகில் மூன்றாவது இடத்தில் பிரான்ஸ் உள்ளது. இலங்கை ஒரு தீவு நாடென்ற வகையில் கப்பல் கட்டுமானத் துறையை அபிவிருத்தி செய்வதன் ஊடாக பொருளாதார ரீதியில் நன்மைகள் கிடைக்கப்பெறும். எனவே, இந்த துறையை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான ஒத்துழைப்புகள் குறித்து பிரான்ஸ் ஜனாதிபதி உள்ளிட்ட தூதுக் குழுவிடம் அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேயே பிரான்ஸ் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளது. குறிப்பாக, பிரான்ஸ் நாட்டில் உள்ள கப்பல் கட்டுமான நிறுவனங்களை இலங்கையுடன் தொடர்புபடுத்த தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக ஜனாதிபதி இம்மேனுவேல் மெக்ரோன் உறுதியளித்துள்ளார். இதற்கு அமைவாக இரு நாட்டு இராஜதந்திர மையங்கள் ஊடாக குறித்த விடயத்தை முன்னெடுக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார். (ஐ)



# தண்ணிமுறிப்பு குளத்தில் அத்துமீறிய 38 பெரும்பான்மையின மீனவர் சிக்கினர்!



முல்லைத்தீவு, ஒக. 07

தண்ணிமுறிப்பு குளத்தில் அத்துமீறி மீன்பிடித்த 38 பெரும்பான்மையின மீனவர்களை பிடித்த அப்பகுதி மக்கள் ஒட்டுசுட்டான் பொலிஸாரிடம் அவர்களை ஒப்படைத்துள்ளனர்.

பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களில் நால்வர் தப்பிச் சென்ற நிலையில், அவர்களில் இருவர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தண்ணிமுறிப்பு குளத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட பெரும்பான்மையினருக்கும் குறித்த பகுதி மக்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட தண்ணிமுறிப்பு, ஹிச்சிராபுரம் பகுதிகளை சேர்ந்த மக்களுக்கு மட்டுமே அனுமதி உள்ள நிலையில், வெலிஓயா பகுதியிலிருந்து வந்த பெரும்பான்மையினர் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டது தொடர்பில் மீனவ சங்கத்தினருக்கும் பெரும்பான்மையின மக்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, குளத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 38 பெரும்பான்மையினத்தவர்களையும் அவர்கள் மீன்பிடிக்கு பயன்படுத்திய உபகரணங்களையும் குறித்த பகுதி மக்கள் ஒட்டுசுட்டான் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

தண்ணிமுறிப்பு நன்னீர் மீன்பிடியால் தமிழ் மற்றும் சிங்கள மீனவர்கள் அடிக்கடி முரண்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# ஓ.பி.எஸ். தனக்கு உதவாத பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலகிச் செல்ல முடிவெடுத்து விட்டாரா?

**முரளிதரன் காசி விஸ்வநாதன்**

அ.தி.மு.க.வை கைப்பற்றுவதற்கான போராட்டத்தில் தொடர்ந்து பின்னடைவைச் சந்தித்து வந்த ஓ.பன்னீர் செல்வம், டிடிவி தினகரனுடன் கைகோர்த்திருப்பதோடு தனக்கு உதவாத பா.ஜ.கவை விட்டு விலக முடிவெடுத்து விட்டதாகவே தெரிகிறது. இது நாடாளுமன்றத் தேர்தலில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும்?

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு, அ.தி.மு.க.வை கைப்பற்றுவதற்கான முயற்சியில் சட்டரீதியாகவும் அரசியல்ரீதியாகவும் தொடர்ந்து பின்னடைவுகளைச் சந்தித்து வருகிறார் ஓ. பன்னீர்செல்வம்.

இருந்தபோதும், பா.ஜ.க.வின் ஆதரவை வெகுவாக அவர் தரப்பு நம்பியிருந்தது. ஆனால், கடந்த சில வாரங்களில் அதிலும் பின்னடைவு ஏற்பட்டிருக்கும் சூழலில், ஓ.பி.எஸ், டிடிவி இருவரும் இன்னும் தீவிரமாக இணைந்து செயல்பட முடிவெடுத்திருப்பதாகத் தெரிகிறது.

ஓ. பன்னீர்செல்வம் செய்தியாளர்களைச் சந்திக்கும் போதெல்லாம், பா.ஜ.கவுடன் கூட்டணி தொடர்வதாகவே தொடர்ந்து சொல்லி வருவார். அது தொடர்பாக செய்தியாளர்கள் எந்தவிதமாகக் கேள்வியெழுப்பினாலும் மாறுபட்ட பதிலை அளிக்கமாட்டார். ஆனால், இப்போது நிலைமை வேறு மாதிரியாக உள்ளது.

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத் தேர்தலின்போது கூட, தானே வலிய பா.ஜ.க.வின் மாநில தலைமையகத்திற்குச் சென்று ஆதரவு கொடுத்தார் ஓ. பன்னீர்செல்வம்.

நீண்ட காலமாகவே எடப்பாடி கே. பழனிச்சாமி - ஓ. பன்னீர்செல்வம் இரு தரப்பினரையும் ஒன்றாகவே நடத்தி வந்த பா.ஜ.க. தலைமை, ஒரு கட்டத்திற்குப் பிறகு முழுமையாக எடப்பாடி கே. பழனிச்சாமி தரப்பின் பக்கம் சாய்ந்துவிட்டது.

ஜூலை 18ஆம் தேதி டில்லியில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கூட்டம் நடந்தபோது, எடப்பாடி கே. பழனிச்சாமிக்கு கொடுக்கப்பட்ட அங்கீகாரம் எல்லாவற்றுக்கும் உச்சமாக அமைந்தது.

இந்தக் கூட்டத்திற்கு தமிழ்நாட்டில் பா.ஜ.கவின் கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. தேர்தலில் போட்டியிட இடம் வழங்கப்படாத சின்னச் சின்ன கட்சிகள்கூட இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டன. ஆனால், அ.தி.மு.க.வின் சார்பில் எடப்பாடி கே. பழனிச்சாமிக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்பட்டதோடு, அவர் பிரதமர் மோடியின் அருகிலும் அமர வைக்கப்பட்டார்.







இதற்கு சில நாட்கள் முன்பாக ஓ.பி.எஸ். ரவீந்திரநாத்தின் வெற்றி செல்லாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தபோதும் பா.ஜ.க. தரப்பிலிருந்து ஆதரவான வார்த்தைகள் ஏதும் வரவில்லை. இந்த நிலையில்தான், ஓ. பன்னீர்செல்வம், டி.டி.வி. தினகரனோடு இணைந்து முழுமையாகச் செயல்பட முடிவெடுத்தார்.

### அதிமுக.வினர் அண்ணாமலையை புறக்கணிக்கிறார்களா?

பா.ஜ.கவின் மாநிலத் தலைவர் கே. அண்ணாமலையின் “என் மண் என் மக்கள்” பாதயாத்திரை ஜூலை 28ஆம் தேதி துவங்கியபோது, அ.தி.மு.க.வின் இரு தரப்பிற்குமே அழைப்பு விடுக்கப்பட்டது.



இருந்தபோதும், எடப்பாடி தரப்பிலிருந்து ஆர்.பி. உதயகுமாரை தவிர வேறு யாரும் செல்லவில்லை. ஓ. பன்னீர்செல்வம் தரப்பிலிருந்து யாருமே போகவில்லை.

அதற்குப் பிறகு, கொடநாடு கொலையாளிகளைக் கைதுசெய்ய வேண்டுமெனக் கோரி, டி.டி.வி. தினகரனுடன் இணைந்து ஒரு மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தையும் ஓ.பி.எஸ் அறிவித்தார். தேனி மாவட்டத்தில் நடந்த போராட்டத்தில் ஓ. பன்னீர்செல்வமும் டி.டி.வி. தினகரனும் பங்கேற்றனர்.

இதில் கலந்துகொண்ட தினகரன் பேசும்போது, ‘துரோகிகள் கையில் சிக்கியுள்ள அதிமுகவை மீட்டு தொண்டர்களிடம் ஒப்படைக்கவே தானும் ஓ.பி.எஸ்சும் ஒன்றிணைந்துள்ளதாக” தெரிவித்தார்.

இது அரசியல் வட்டாரங்களில் சலசலப்பை ஏற்படுத்திய நிலையில், பாத யாத்திரையில் இருந்த அண்ணாமலையிடம், பா.ஜ.க. ஒதுக்குவதால் ஓ. பன்னீர்செல்வம் விரக்தியில் இருக்கிறாரா எனக் கேள்வியெழுப்பப்பட்டது.

“நாங்கள் யாரையும் ஒதுக்கவில்லை. அவரும் விரக்தியில் இல்லை” என்று பதிலளித்தார் அண்ணாமலை.

ஆனால், ஓ. பன்னீர்செல்வம் தரப்பு அண்ணாமலை மீது மிகுந்த கோபத்தில் இருப்பதாகவே தெரிகிறது. புதன்கிழமையன்று சேலத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த ஓ.பி.எஸ். தரப்பின் கொள்கை பரப்புச் செயலாளரான புகழேந்தி, பா.ஜ.க. மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.

“எடப்பாடி பழனிசாமியும் ஓ.பன்னீர்செல்வமும் கூட்டணியில் இருக்கிறார்கள் என்கிறார் அண்ணாமலை. ஆனால், தே.ஜ.கூவின் கூட்டம் நடந்தபோது ஓ.பி.எஸ்சுக்கு அழைப்பு விடுக்கவில்லை. எனவே, அப்போதே கூட்டணி முடிந்துவிட்டது.

உங்களை நம்பி நாங்கள் இல்லை. மேலும், அண்ணாமலை பல்வேறு இடங்களில் எடப்பாடி பழனிசாமியை பொதுச் செயலாளர் என்று குறிப்பிடுகிறார். ஆனால், ஓ.பி.எஸ்.ஐ ஒருங்கிணைப்பாளர் என்று குறிப்பிடுவது இல்லை. முன்னாள் முதல்வர் என்று மட்டுமே கூறுகிறார். அண்ணாமலை மீண்டும் எடப்பாடி பழனிசாமியை பொதுச் செயலாளர் என்றும், ஓபிஎஸ்-ஐ முன்னாள் முதல்வர் என்றும் குறிப்பிட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுப்போம்,” என்று அண்ணாமலையைக் கடுமையாக ஒருமையில் பேசினார்.

### ‘பா.ஜ.க. மூன்று சதவீத கட்சி’ - ஓ. பன்னீர்செல்வம் தரப்பு

புகழேந்தியின் இந்தப் பேச்சை வைத்துப் பார்க்கும்போது, ஓ. பன்னீர்செல்வத்தைப் பொறுத்தவரை பா.ஜ.கவை கடுமையாக எதிர்க்கும் மனநிலைக்கு வந்துவிட்டது தெளிவாகத் தெரிகிறது.

இதுகுறித்து பேசிய ஓ. பன்னீர்செல்வம் அணியின் கொள்கை பரப்புச் செயலாளரான மருது அழகுராஜ், பா.ஜ.கவின் செயல்பாடுகளைக் கடுமையாக விமர்சிக்கிறார்.

‘பா.ஜ.கவின் கூட்டணியில் இருந்தபடி, அந்தக் கட்சியைக் கடுமையாக விமர்சித்தவர்கள் சி.வி. சண்முகம், செங்கோட்டையன், பொன்னையன், எடப்பாடி கே. பழனிச்சாமி போன்றவர்கள். தரம்தாழ்ந்தெல்லாம் விமர்சித்தார்கள்.

இதற்கெல்லாம் உச்சபட்சமாகப் பேசிய பொன்னையன், இந்தியாவிலேயே மிகப் பெரிய ஊழல் கட்சி பா.ஜ.கதான் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் சித்தாந்தங்களை முன்வைத்து இந்தியாவை அழிக்கப் பார்க்கிறது என்றார்.

ஆனால், பா.ஜ.கவிடம் தோழமை உணர்வோடு தவறுகளைச் சுட்டிக்காட்டி, இணக்கமான அரசியலை மேற்கொண்டார் ஓ.பி.எஸ். இருந்தபோதும், எங்களுக்குள் இந்தப் பிளவு உருவானதிலிருந்து எடப்பாடிக்கு பா.ஜ.க.

(09ஆம் பக்கம் பார்க்க)







# இம்ரான் கான் கைது, தேர்தலில் நிற்க தடை: பாகிஸ்தானில் என்ன நடக்கிறது?

அரசுக் கருவூலமான தோஷகானாவிடம் இருந்த பரிசுப் பொருட்களை சட்டவிரோதமாக விற்றதாக பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் அவர் குற்றவாளி என்று இஸ்லாமாபாத்தில் உள்ள நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தீர்ப்பையடுத்து லாகூரில் உள்ள இல்லத்தில் இருந்த இம்ரான் கானை போலீசார் கைது செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்த இஸ்லாமாபாத் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தின் நீதிபதி ஹூமாயுன் தில்வார், இம்ரான் கான் தேர்தலில் போட்டியிட 5 ஆண்டுகள் தடையும் மூன்று ஆண்டுகள் சிறை தண்டனையும் 10 லட்சம் ரூபாய் அபராதமும் விதித்து உத்தரவிட்டார்.

இம்ரான் கான் மீதான வழக்கின் தீர்ப்பு காரணமாக நீதிமன்ற வளாகத்தில் ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர்.

நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒருதலைபட்சமானது என்று இம்ரான் கானின் கட்சியான தெக்ரீக்-இ-இன்சாப் தெரிவித்துள்ளது. அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “வரலாற்றில் மிக மோசமான இந்த விசாரணையில், ஒருதலைப்பட்சமாக செயல்படும் நீதிபதி நீதியை கொலை செய்ய முயற்சித்துள்ளார், ஒரு குறிப்பிட்ட அஜண்டாவின் கீழ் வழக்கில் உள்ள உண்மைகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் தீர்ப்பையடுத்து, இம்ரான் கான் தேர்தலில் போட்டியிட 5 ஆண்டுகள் தடை விதிக்கப்படுவதாக பாகிஸ்தான் தேர்தல் ஆணையத்தின் வழக்கறிஞர் அம்ஜத் பர்வேஸ் தெரிவித்துள்ளார்.

**இம்ரான் கான் மீதான வழக்கு என்ன?**

தோஷகானா என்பது அரசு கருவூலம். பிரதமர், அதிபர் அல்லது பிற முக்கியத் தலைவர்கள் விஜயத்தின் போது அளிக்கப்படும் பெறுமதிமிக்க பரிசுகள் இங்கு வைக்கப்படுகின்றன.

எந்தவொரு வெளிநாட்டுப் பயணத்தின்போதும்,



வெளியுறவு அமைச்சகத்தின் அதிகாரிகள் தங்களுக்கு அளிக்கப்படும் பரிசுகள், திரும்பி வரும்போது அவை தோஷகானில் வைக்கப்படும்.

தோஷகானில் வைக்கப்படும் பொருட்கள் நினைவுப் பொருட்களாகக் கருதப்படுகின்றன. அமைச்சரவையின் ஒப்புதலுக்குப் பிறகே இங்கு வைக்கப்பட்டுள்ள பொருட்களை விற்பனை செய்ய முடியும்.

பாகிஸ்தானில், இத்தகைய பரிசுப் பொருளின் மதிப்பு 30,000க்கும் குறைவாக இருந்தால், அதை சம்பந்தப்பட்டவர் இலவசமாக வைத்துக்கொள்ளலாம். அதற்கு மேல் இருந்தால், அந்த விலையில் 50 சதவீதத்தை டெபாசிட் செய்து வாங்கிக்கொள்ளலாம்.

2020ஆம் ஆண்டுக்கு முன்பு, பொருட்களின் அசல் விலையில் 20 சதவீதம் மட்டுமே டெபாசிட் செய்ய வேண்டும்.

இந்தப் பரிசுகளில் பொதுவாக விலை உயர்ந்த கடிகாரங்கள், தங்கம், வைர நகைகள், விலை உயர்ந்த ஆபரணங்கள், நினைவுப்பொருட்கள், வைரம் பதித்த பேனாக்கள், மண், பீங்கான் போன்றவற்றில் ஆன பாண்டங்கள், தரை விரிப்புகள் ஆகியவை அடங்கும்.

உண்மையில், இம்ரான் கான் ஆட்சியில் இருந்தபோது வாங்கிய பரிசுப் பொருட்கள் குறித்து தேர்தல் ஆணையத்திடம் முறையான தகவல் தெரிவிக்கவில்லை என்று குற்றச்சாட்டுகள் எழுந்தன.

**இம்ரான் கான் வாங்கிய பரிசுகள் என்ன?**

பாகிஸ்தான் பிரதமராகப் பதவியேற்ற இரண்டு மாதங்களிலேயே இம்ரான் கான், தோஷகானாவில் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் டெபாசிட் செய்து பல பரிசுகளை வாங்கியுள்ளார். இதில் சுமார் 85 லட்சம் மதிப்பிலான கைக்கடிகாரம், 60 லட்சம் மதிப்புள்ள கஃப், 87 லட்சம் மதிப்புள்ள பேனா, மோதிரம் ஆகியவை அடங்கும்.

இதேபோல் தோஷகானா நிறுவனத்திடம் இருந்து 7.5 லட்சம் மதிப்புள்ள ரோலக்ஸ் கைக்கடிகாரத்தையும் 15 லட்சம் மதிப்புள்ள ரோலக்ஸ் கடிகாரத்தையும் 2.5 லட்சத்திற்கு இம்ரான் கான் வாங்கியுள்ளார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், இம்ரான் கான், 49 லட்சம் மதிப்புள்ள கஃப்லிங்க் மற்றும் கடிகாரங்கள் அடங்கிய பெட்டியை பாதி விலையில் வாங்கினார்.

இதுதவிர, பரிசுப் பொருட்களை வாங்குவதற்கு விற்பதற்கும் 2 கோடி ரூபாய்க்கு பதிலாக 80 லட்சம் ரூபாய் மட்டுமே தோஷகானாவிடம் வழங்கப்பட்டது.

ஆவணங்களின்படி, விற்பனை செய்யப்பட்டதாகக் கூறப்படும் கைக்கடிகாரமும் தேர்தல் ஆணையத்தின் பட்டியலில் சேர்க்கப்படவில்லை.

இம்ரான் கானின் மனைவி புஷ்ரா பீபியின் முதல் சவூதி அரேபிய பயணத்தின்போது பரிசாக இந்தக் கடிகாரம் வழங்கப்பட்டது.

இதன் விலை 85 கோடி எனக் கூறப்படுகிறது. இம்ரான் கான் இந்தக் கடிகாரத்தை 20 சதவீத விலை கொடுத்து வாங்கியுள்ளார். ●

# ஓ.பி.எஸ் தனக்கு உதவாத பா.ஜ.க...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

உதவுகிறது என்ற சந்தேகம் வலுத்துக்கொண்டே வந்தது.

“இப்போதைய சூழலில் மேற்கு மண்டலத்தில்தான் ஒன்றிரண்டு தொகுதிகளைக் கைப்பற்றலாம், அதற்கு எடப்பாடி அவசியம்” என பா.ஜ.க. நினைக்கலாம். ஆகவே, எடப்பாடியிடம் பா.ஜ.க. சரணடைந்திருப்பதாகவே நாங்கள் கருதுகிறோம்.

பத்து ஆண்டுகளாக இந்தியாவை ஆட்சி செய்த பா.ஜ.க. தனது இடது புறம் எடப்பாடி கே. பழனிச்சாமியை அமர்த்தும் அளவுக்கு பலவீனமான கூட்டணியாகி விட்டார்கள். அந்தக் கூட்டணியிலேயே பெரிய கட்சித் தலைவராக எடப்பாடி கே. பழனிச்சாமியை குறிப்பிடுகிறார்கள். ஆனால், அவரிடம் ஒரு எம்.பிகூட கிடையாது.

அ.தி.மு.கவின் தொண்டர்கள் முடிவெடுக்க வேண்டிய ஒரு விவகாரத்தில், பல இடங்களில் அழுத்தம் கொடுத்து பல சாதகமான முடிவுகளைப் பெற்றுத் தந்ததாக தொண்டர்கள் கருதுகிறார்கள். ஈரோடு கிழக்குத் தொகுதி தேர்தல் வந்தபோது, இதில் எடப்பாடி தரப்பே போட்டியிடட்டும் நீங்கள் வேட்பாளரைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள் என சமாதான பஞ்சாயத்து செய்தார் அண்ணாமலை.

ஆனால், அதே நேரத்தில் எடப்பாடி கே. பழனிச்சாமி இடைக்காலப் பொதுச் செயலாளர் என எங்கேயும் அங்கீகாரம் வருவதற்கு முன்பாகவே, அவரை இடைக்காலப் பொதுச் செயலாளராக அறிவித்தார். ஆனால், ஓ.பி.எஸ்ஸை முன்னாள் முதல்வர் என்கிறார்.

கட்சித் தலைமை தொடர்பாக உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் எங்களுக்குப் பல ஆச்சரியங்கள் இருக்கின்றன. தேர்தல் நடைமுறைகள் அமலுக்கு வந்துவிட்டால், இது போன்ற தீர்ப்புகளை நீதிமன்றங்கள் வழங்காது. ஆனால், தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு இரண்டு சாதகமான தீர்ப்புகள் எடப்பாடிக்குக் கிடைத்தன. ஆகவே, நாங்கள் நீதிமன்றத்தைவிட மக்கள் மன்றத்தைப் பெரிதாக நம்புகிறோம்.

கட்சிக்குள் உரிமைப் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட நிரந்தரப் பொதுச் செயலாளர் பதவியைப் பறித்திருக்கிறார்கள். நாங்கள் இதற்காகப் போராடும்போது, பா.ஜ.க. விலகி நின்று வேடிக்கை பார்க்காமல், ஒரு தரப்புக்கு சாதகமாக நடந்துகொள்கிறார்கள் என்ற கோபம் உருவாகியிருக்கிறது.

டில்லியில் தே.ஜ.கூட்டணி கூட்டம் நடந்தபோது, எடப்பாடியை அழைத்து இன்னொரு கூடுதல் அங்கீகரத்தை அளிப்பது போல நடந்து கொண்டது மிகப் பெரிய தவறு.

இம்மாதிரி சூழலில் எங்களை எட்டி உதைக்கும் கால்களை முத்தமிட வேண்டிய அவசியம் எங்களுக்குக் கிடையாது. பா.ஜ.க. ஒரு 3 சதவீத கட்சி. 30 சதவீத வாக்குகளைக் கொண்ட அ.தி.மு.கவை மூன்றாகப் பிளவுபட வைத்து, மூன்று பேரும் வந்து எங்கள் பல்லக்கைத் தூக்குங்கள் என்ற அரசியலை முன்னெடுக்கிறார்கள். பா.ஜ.கவின் நரித்தனத்தை நாங்கள் புரிந்துகொண்டுவிட்டோம்.

தென் மாவட்டங்களில் மட்டும்தான் ஓ.பி.எஸ்ஸுக்கு செல்வாக்கு இருப்பதாகச் சொல்வது தவறு. எங்களுக்கு ஆதரவு பெருகி வருகிறது. கே.சி. பழனிச்சாமி ஆதரிக்கிறார். சசிகலா எங்களை ஆதரிக்கலாம். ஏற்கெனவே அ.ம.மு.க. எங்களை ஆதரிக்கிறது.

விரைவிலேயே எடப்பாடி இல்லாத அ.தி.மு.க. உருவாகலாம். அவர்தான் தலைவர் என்றால் 2024இல் மிகப் பெரிய அவமானத்தை அவர்கள் எதிர்கொள்வார்கள்,” என்கிறார் மருது அழகுராஜ்.

வரவுள்ள 2024ஆம் ஆண்டு தேர்தலின் போது அ.தி.மு.கவின் எடப்பாடி கே. பழனிச்சாமி தரப்பிடமிருந்து கூடுதல் இடங்களைப் பெற்று, ஓ.பி.எஸ். தரப்புக்கும் டிடிவி தினகரன் தரப்புக்கும் தர பா.ஜ.க. முயன்றால், அதை ஓ. பன்னீர்செல்வம் தரப்பு ஏற்குமா?

‘அ.தி.மு.கவே நாங்கள்தான் எனும்போது, பா.ஜ.க. அளிக்கும் கொசுறுச் சோறை வாங்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. வெறும் தேர்தலை மட்டும் அரசியல் என நாங்கள் நினைக்கவில்லை.

பிரதமர் மோடியின் ஆட்சி மீதான கோபத்தைவிட, அமித்ஷாவின் அரசியல் மீதான கோபம் அதிகம் இருக்கிறது. சிவசேனாவை பிளந்தார்கள். நிதிஷ் குமாரை சிதறடித்தார்கள்.

தென்னகத்தில் மிகப் பெரிய வாய்ப்புகளை பா.ஜ.கவுக்கு உருவாக்கிக் கொடுத்த பாலயோகி, சந்திரபாபு நாயுடு ஆகியோரையும் கைவிட்டார்கள். இதே அரசியலை அவர்கள் அ.தி.மு.கவிடமும் செய்கிறார்கள். அவர்களுக்கு 2024 தேர்தல் உயிர் மூச்சு. எங்களுக்கு அ.தி.மு.கவின் ஜனநாயகம் மீட்கப்பட வேண்டும் என்பதுதான் உயிர் மூச்சு,” என்கிறார் மருது அழகுராஜ்.

**அண்ணாமலை எடப்பாடியை உரசிப் பார்க்க நினைக்கிறாரா?**

பன்னீர்செல்வம் தரப்பு, பா.ஜ.கவை விட்டுவிலக முடிவெடுத்துவிட்டாலும், புதன்கிழமையன்று பேட்டியளித்த அண்ணாமலை, ஓ. பன்னீர்செல்வத்தை ஒதுக்கவில்லை என்று கூறியிருப்பதை எப்படிப் புரிந்துகொள்வது எனக் கேள்வியெழுப்புகிறார் மூத்த பத்திரிகையாளரான குபேந்திரன்.

‘ஓ.பி.எஸ்-ஐ ஒதுக்கவில்லை என அண்ணாமலை சொன்னதற்கு என்ன அர்த்தம்?

இன்னும் சில கட்சிகள் கூட்டணியில் இணைய வாய்ப்பு இருக்கிறது என்கிறார். இப்படிப் பேசுவதன் நோக்கம் என்னவென்று தெரியவில்லை. இப்படிப் பேசுவதன் மூலம் எடப்பாடியை உரசிப் பார்க்க நினைக்கிறார் என்றால், அண்ணாமலையின் நிலை சிக்கல்தான். அதே நேரம், ஓ.பி.எஸ் தரப்பை கூட்டணியில் சேர்க்க பா.ஜ.க. தலைமை விரும்பாது.

வரவுள்ள 2024இல் நாடாளுமன்றத் தேர்தல் வரும்போது டிடிவி - ஓ.பி.எஸ். அணி குறிப்பிடத்தகுந்த நெருக்கடியை ஏற்படுத்துவார்கள். தென் மாவட்டங்களில் 6-7 தொகுதிகளில் டி.டி.விக்கு தலா ஒவ்வொரு தொகுதியிலும் 2 சதவீத வாக்குகள் இருக்கின்றன. சில இடங்களில் கூடுதலாகவும் இருக்கும்.

ஓ.பி.எஸ். அவருடன் இணைந்தால் இந்த வாக்கு சதவீதம் இன்னும் அதிகரிக்கும். இந்த 6-7 தொகுதிகளில் அ.தி.மு.க.வுக்கு மிகப் பெரிய அளவில் நெருக்கடி கொடுப்பார்கள். டிடிவி - ஓ.பி.எஸ். தரப்புக்கு தி.மு.கவும் மறைமுக உதவியைச் செய்யலாம்.

தாங்கள் இல்லாவிட்டால் அ.தி.மு.கவுக்கு நெருக்கடிதான் என்பதை எடப்பாடி உணர வேண்டும் என டிடிவி - ஓ.பி.எஸ். தரப்பு நினைக்கிறது. ஆனால், டி.டி.வி., ஓ. பன்னீர்செல்வம், சசிகாலா ஆகிய மூவரும் உள்ளே வந்தால் தனக்குச் சிக்கல் என்பது எடப்பாடிக்கு நன்றாகவே தெரியும். அதற்கு அவர் அனுமதிக்க மாட்டார்.

இந்தத் தேர்தல் எடப்பாடிக்கு நெருக்கடியான தேர்தல்தான். ஆனால், அவருடைய இலக்கு 2026தான். அந்த நேரத்தில் டி.டி.வி. - ஓ.பி.எஸ். என்ன செய்கிறார்கள் என்பதை அப்போது பார்த்துக்கொள்ளலாம் என அவர் முடிவெடுக்கலாம்,” என்கிறார் குபேந்திரன். ●

# இ. தொ. க. ஆதரவளித்தால் அதனை நாம் வரவேற்போம்

## தமிழ்த் தேசிய முற்போக்கு கூட்டணி



கொழும்பு, ஓக. 07

தமிழ் முற்போக்குக் கூட்டணியால் எதிர்வரும் 12 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடைபவனிக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்கினால் அதனை வரவேற்போம் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான பழனி திகாம்பரம் எம்.பி. தெரிவித்தார்.

தனியார் வானொலியொன்றில் ஒலிபரப்பான அரசியல் நிகழ்ச்சியில் பழனி திகாம்பரம் எம்.பி. பங்கேற்றிருந்தார்.

இதன்போது, 'தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் இடையில் தற்போது சுமுகமான உறவு நிலவுகின்றது. உங்களின் பேரணிக்கு இ.தொ.கா.வின் ஆதரவு கோரப்பட்டுள்ளதா?' என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே திகாம்பரம் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

"நாம் பொதுவாக அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளோம். வந்தால் (இ.தொ.கா.) வரவேற்போம். அவர்கள் (இ.தொ.கா.) நவம்பரில் 'மலையகம் - 200' நிகழ்வைச் செய்யவுள்ளனர். அதற்கு நாம் முழு ஆதரவு வழங்குவோம்" - என்றும் திகாம்பரம் எம்.பி. குறிப்பிட்டார்.

# சிறை கண்காணிப்பாளரை தாக்கியவர்களில் ஒருவர் கைது!

கொழும்பு, ஓக. 07

காலி சிறைச்சாலையில் பணியாற்றும் சிறைச்சாலை கண்காணிப்பாளர் ஒருவர் பயணித்த பஸ்ஸில் ஏறி, அவர் மீது தாக்குதல் நடத்தி துப்பாக்கியால் சுடமுயற்சித்த குழுவைச் சேர்ந்த ஒருவரை பயணிகள் பிடித்து தம்மிடம் ஒப்படைத்துள்ளனர் என்று வெலிகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு உள்ளான கண்காணிப்பாளர் மாத்தறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிறைச்சாலை கண்காணிப்பாளர் தனது கடமைகளை முடித்துக்கொண்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது சுமார் 6 பேர் கொண்ட குழுவொன்று பஸ்ஸில் ஏறி அவரை தாக்கியது.

இதற்கு பயணிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து துப்பாக்கிச் சூடு நடத்த முயற்சித்த குழு, பின்னர் பஸ்ஸிலிருந்து தப்பியோடியுள்ளனர். இவர்களில் ஒருவரே பயணிகளால் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# மகளிர் இஸ்லாமிய கல்லூரியின் பட்டமளிப்பு விழா நடைபெற்றது!

அக்கரைப்பற்று, ஓக. 07

அட்டாளைச்சேனை பாத்திமா மகளிர் இஸ்லாமிய கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கல்லூரி வளாகத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ. எல். ஹனீஸ் தலைமையில் நடைபெற்றது.




இந்த விழாவில் பிரதம அதிதியாகவும் சிறப்புப் பேச்சாளராகவும் கொழும்பு ஸம் ஸம் பௌண்டேசன் தலைவர் அஷ்சேய்க் எம்.எச்.முஹம்மட் யூசுப் முப்தி கலந்து கொண்டார்.

விழாவின் பெண்கள் அரங்குக்கு மருத்துவ நிபுணர் ஆபீதாகையும் தலைமை தாங்கினார்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் மொத்தமாக 68 பேர் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். இதில் 38 ஆலிமாகளும், 30 ஹாபிழாகளும் அடங்குகின்றனர்.

(ஐ)

# விபத்தில் தாய், மகன் பலி; தந்தை படுகாயமடைந்தார்

கொழும்பு, ஓக. 07

வாகன விபத்தில் தாயும் மகனும் சாவடைந்தனர். தந்தை படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு - மகரகம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

பாரவூர்தியும் காரும் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து இடம்பெற்றது. இதில், காரைச் செலுத்திச் சென்ற 27 வயது இளம் பொறியியலாளரும் முன் ஆசனத்தில் அமர்ந்து சென்ற அவரின் தாயாரும் உயிரிழந்தனர்.

காரின் பின் ஆசனத்தில் அமர்ந்து சென்ற 58 வயதுடைய தந்தை படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் பாரவூர்தியின் சாரதியை கைது செய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)






# காணிகளை ஆக்கிரமித்தவர்களை வெளியேற்றுமாறு ஆளுநர் உத்தரவு

மட்டக்களப்பு, ஓக. 07

**மட்டக்களப்பின் நாவலடி- பொலநறுவை பிரதான வீதியை அண்டிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத காணி அபகரிப்பை தடுத்து நிறுத்தவும், அத்துமீறி காணி அபகரித்தவர்களை அகற்றுமாறும் கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் உத்தரவிட்டுள்ளார்.**

அந்த பகுதியிலுள்ள மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான காடுகள் முஸ்லிம் மக்களால் கையகப்படுத்தப்பட்டு, நெருப்பூட்டி அழிக்கப்பட்டு எல்லையிடப்பட்டுள்ளன. சில வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் நேற்று முன்தினம் இரவு 9.30 மணிக்கு கிழக்கு ஆளுநரை நேரடியாக சந்தித்து பேசினார்.

இதைத் தொடர்ந்து ஆளுநர் உடனடியாக செயல்பட்டு, பொலிஸார் மற்றும் வனவளத்துறையினரை தொடர்பு கொண்டு அத்துமீறுபவர்களை அகற்றுமாறு உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# களுவாஞ்சிக்குடி விபத்து; இருவர் படுகாயமடைந்தனர்!

மட்டக்களப்பு, ஓக. 07

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவின் செட்டிபாளையம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற முச்சக்கரவண்டி விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

மட்டு. - கல்முனை வீதி வழியாக மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டி கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதி தூக்கிவீசப்பட்டு வீதியோரமாக நின்றவர் மீது வீழ்ந்தது.

இதில், 70 வயதான பெண் படுகாயமடைந்தார். அத்துடன், முச்சக்கர வண்டியை செலுத்திய சாரதியும் காயங்களுக்கு உள்ளானார்.

இருவரும் களுவாஞ்சிக்குடி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# பெரியபள்ளிவாசலில் சிறுவர் பூங்கா திறப்பு



அக்கரைப்பற்று, ஓக. 07

அக்கரைப்பற்று பெரியபள்ளிவாசலில் சிறுவர்களுக்கான விளையாட்டு பூங்கா நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது கருத்து வெளியிட்ட ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம் சபீஸ்,

சிறுவயது முதல் குழந்தைகளை பள்ளிவாசலோடு இணைக்ககூடிய விதத்தில் இந்த பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் அதிகளவான இளைஞர்கள் பள்ளிவாசலுக்கு வருகை தருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் பெற்றோர்களுடன் இணைந்து மேற்கொண்டோம். இன்றைய இளைஞர்கள் பள்ளிவாசலில் தொழாமல் இங்கு நடைபெறும் திக்ருகளை நாவினால் மொழியாமல், பாயான்களை (மார்க்க விடயங்களை) காது கொடுத்து கேட்காமல் நல்ல சமுதாயத்தை உருவாக்கிவிட முடியாது - என்றார். (ஐ)

# சர்வதேச பழங்குடிகள் தினம் வாகரையில் கடைப்பிடிப்பு

மட்டக்களப்பு, ஓக. 07

'சுய நிர்ணயத்துக்கான மாற்றத்தின் முகவர்களாக பழங்குடியின் இளைஞர்கள்.'

என்ற தொனிப்பொருளில் சர்வதேச பழங்குடிகள் தினம் நேற்றுமுன்தினம் வாகரை குஞ்சன் கல்குளத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சிவில் அமையத்தின் ஏற்பாட்டில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

பழங்குடியின் தலைவர் நல்லதம்பி வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வானது மங்கள விளக்கேற்றல், குல தெய்வ வழிபாட்டுடன் ஆரம்பமானது.

நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக சமூக விஞ்ஞானத்துறை தலைவர் ஜி. விக்னேஸ்வரன் கலந்து கொண்டு பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் நூல் ஆய்வாளர்களால் இலங்கையில் உள்ள பழங்குடியினர் தொடர்பான வாழ்வியல் விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட கட்டுரைகள் அடங்கிய நூல்கள், ஆவணங்கள் என்பன பழங்குடியினத் தலைவரிடம் கையளிக்கப்பட்டன.



இவற்றைப் பாதுகாப்பாக வைத்திருக்க ஆவணக் காப்பகம் ஒன்றும் வழங்கப்பட்டது. பழங்குடி மக்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றன. (ஐ)

# ஊடகவியலாளர் சம்மேளன உறுப்பினர்களின் ஒன்றுகூடல்

நிந்தவூர், ஓக. 07

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் வருடாந்த குடும்ப ஒன்று கூடலும் பொதுச் சபைக் கூட்டமும் நிந்தவூர் றிலெக்ஸ் கார்டன் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

வருடாந்த ஒன்றுகூடல் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் யூ.எம். இஸ்ஹாக் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளில், ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் சம்மேளன ஸ்தாபக உறுப்பினரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான மீரா. அலிரஜாய் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் சம்மேளனத்தின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான கலாபூஷணம் மீரா. எஸ். இஸடீன், சம்மேளன ஆலோசகரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான கலாபூஷணம் ஏ. எல். எம். சலீம் ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றினர். சம்மேளன செயலாளர் எம்.எம்.ஏ.சமட் நிகழ்ச்சிகளுக்கான ஒருங்கிணைப்பு செயல்பாடுகளையும் முன்னெடுத்தார்.

நிகழ்வின் விசேட அம்சமாக சிறப்பு அதிதியாகப் பங்கேற்ற ஊடகவியலாளர் மீரா அலிரஜாய்வின் அனுசரணையில் சம்மேளன உறுப்பினர்களுக்கான



சீருடைகள் (ரீசேர்ட்) வழங்கப்பட்டது. அத்துடன்,

உறுப்பினர்களுக்கான சம்மேளன ஊடக அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டன.

இதேவேளை நீண்டகாலமாக சம்மேளன வளர்ச்சிக்குப் பங்களிப்புக்களை வழங்கிவரும், ஊடகவியலாளர் மீரா அலிரஜாய் நிகழ்வில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட அதேவேளை, அண்மையில் திருமண பந்தத்தில் இணைந்த ஊடக குடும்பத்தைச் சேர்ந்த மீரா ரப்ஸான் - பாத்திமா நுஸ்ரத் தம்பதியினருக்கும் வாழ்த்து மடல் மற்றும் நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

முழு நாள் நிகழ்வாக இடம்பெற்ற இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் சம்மேளன உறுப்பினர்கள் குடும்ப சகிதம் கலந்து கொண்டதுடன் குதூகல போட்டி மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (ஐ-06)

# பெரும்போகத்தை புறக்கணிக்க முடிவு

மட்டக்களப்பு, ஓக. 07

எதிர்வரும் பெரும் போகத்துக்கு முன்பாக பசளைகளை இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். இல்லையேல் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டோம் என்று மட்டக்களப்பு கமக்கார அமைப்புகளின் அதிகார சபையின் தலைவர் அருளானந்தம் ரமேஷ் தெரிவித்தார்.

மட்டு. ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

# பொலிஸார் மீது தாக்குதல்; சிப்பாய் உட்பட மூவர் கைது!

அக்கரைப்பற்று, ஓக. 07

அம்பாறை வீரசிங்க விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரை தாக்கிய படை சிப்பாயையும் அவரின் நண்பர்கள் இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அந்தப் பகுதியில் இடம்பெற்ற முறுகல் நிலையை சமரசம் செய்த பொலிஸார் மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதலை நடத்தியவர்கள் மது போதையில் இருந்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பலத்த காயங்களுக்குள்ளான இரு பொலிஸ் உத்தியோஸ்தர்களும் சிகிச்சைக்காக அம்பாறை பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொண்டிருந்த அம்பாறை பொலிஸார் சுதுவெல பகுதியில் 32 வயது சிப்பாயையும் அவரின் நண்பர்களையும் கைது செய்தனர்.

கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

காட்டுத் தீ பரவலால்

# கிழக்கு மாகாணத்துக்கான ரயில் சேவைகள் பாதிப்பு!

கொழும்பு, ஓக. 07

காட்டுத் தீயால் புகையிரத பாதைகளில் ஏற்பட்ட பாதிப்புகளால் கிழக்கு மாகாணத்துக்கான ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஹபரணைக்கும் கல்ஓயாவுக்கும் இடையில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது. இதனால் தண்டவாளங்கள் தீ பிடித்தன. தீயால் பாதிக்கப்பட்ட தண்டவாளங்கள் அகற்றப்பட்டு புதிய தண்டவாளங்கள் இணைக்கப்பட்டு வருகின்றது என்றும் அந்தத் திணைக்களம் கூறியது.

அத்துடன் இந்த தீ பரவல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு நெடுஞ்சாலைகள் மற்றும் தொழில்துறை அதிகாரிகளுக்கு புகையிரதத் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, காட்டுத் தீ பரவல்கள் தற்போது அதிகரித்து வருகின்றன என்று வனப் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இரத்த மாற்ற மையம்மீது ரஷ்யா வான்வழி தாக்குதல்!

## மக்கள் பலர் பலி என்கிறது உக்ரைன்

கீவ், ஒக. 07

**உக்ரைனின் வடகிழக்கு பகுதியிலுள்ள இரத்தம் ஏற்றும் மையத்தின் மீது ரஷ்யா நடத்திய வான் வழித் தாக்குதலில் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் காயமடைந்தனர் என்று உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.**

கார்கீவ் பகுதியில் சனிக்கிழமை இரவு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் குறித்து ரஷ்யா பகிரங்கமாக எந்த அறிவிப்பையும் செய்யவில்லை.

எனினும், இந்தத் தாக்குதலில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் மற்றும் காயமடைந்தனர் என்ற விவரங்களை உக்ரைன் தெரிவிக்கவில்லை.

சனிக்கிழமை பகல் கருங்கடலில் ரஷ்யாவுக்கு சொந்தமான தாங்கி படகு ஒன்றை உக்ரைனின் ஆளில்லா விமானம் தாக்கியழித்தது. இதற்கு பதிலடியாக



ரஷ்யா உக்ரைன் மீது தொடர்ச்சியாக வான்வழி தாக்குதல்களை அதிகரித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாகிஸ்தானில் கடும் பொருளாதார நெருக்கடி!

இஸ்லாமாபாத், ஒக. 07

பாகிஸ்தான் கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது. இந்நிலையில், தற்போது அங்கு பணவீக்கம் 30 சதவீதமாக உயர்ந்துள்ளது.

மரக்கறிகள் உட்பட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உச்சம் தொட்டுள்ளது. உணவுப் பொருட்கள், எரிவாயு, பெற்றோல் உட்பட 54 அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. இதனால் மக்கள் மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

விலைவாசி உயர்வால் அத்தியாவசிய பொருட்களை வாங்க முடியாமல் மக்கள் தவித்து வருகின்றனர்.


பாகிஸ்தானின் கடன் சுமை அதிகரித்துள்ள நிலையில், அதன் அந்நிய செலாவணி கையிருப்பு முற்றிலும் குறைந்துள்ளது. இதனால், தேவையான பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய முடியாத சூழலில் அந்நாடு உள்ளது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக சர்வதேச செலாவணி நிதியத்திடமும், நட்பு நாடுகளிடமும் பாகிஸ்தான் உதவி கோரியுள்ளது. கடந்த மாதம் சவூதி அரேபியா 200 கோடி டொலர், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் 100 கோடி டொலர் நிதி வழங்கின.

பொருளாதார நெருக்கடி சூழல் தொடர்ந்து தீவிரமடையும் பட்சத்தில், பாகிஸ்தானில் நடுத்தர வர்க்க மக்கள் வறுமை நிலைக்கு தள்ளப்படுவர் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

(ஐ)

# சந்திரனின் சுற்றுப்பாதைக்குள் நுழைந்தது இந்திய விண்கலம்!




சிறீ ஹரிகோட்டா, ஒக. 07

இந்தியாவின் சந்திராயன் -3 விண்கலம் நிலவின் சுற்றுப் பாதையில் நுழைந்துள்ளது.

ரோவர் கொண்ட இந்த விண்கலம் கடந்த ஜூலை 14ஆம் திகதி புறப்பட்டது. இந்த விண்கலம் சந்திரனின் மேற்பரப்பில் வரும் 23 அல்லது 24ஆம் திகதி ரோவரை நிறுவும்.

இந்த முயற்சியில் வெற்றி பெற்றால் நிலவின் தென் துருவத்தின் அருகே முதலில் தரையிறங்கிய நாடு என்ற பெருமையை இந்தியா பெறும்.

அமெரிக்கா, முன்னாள் சோவியத் யூனியன், சீனாவுக்கு பின்னர் சந்திரனில் விண்கலத்தை தரையிறக்கும் நான்காவது சந்தர்ப்பம் இதுவாகவும் இருக்கும்.

சந்திராயன் 3 விண்கலம் ஒரு வாரமாக பூமியை சுற்றி வந்தது. செவ்வாய்க்கிழமை சந்திரனை நோக்கிப் புறப்பட்டது. இந்த விண்கலம் இந்தியாவின் மூன்றாவது விண்கலம் ஆகும். இது முந்தைய பயணங்களுடன் ஒப்பிடுகையில் வெற்றியை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியா 2008 இல் சந்திராயன் 1ஐ சந்திரனுக்கு அனுப்பியது. இது சந்திர மேற்பரப்பில் நீர் மூலக்கூறு இருப்பதை கண்டறிந்தது. வளிமண்டலம் இருப்பதையும் நிறுவியது.

2019 இல் சந்திராயன் 2 ரோவருடன் பயணமானது. இதன் முழு நோக்கம் வெற்றியடையவில்லை. எனினும், சந்திரனை சுற்றியவாறு இன்றும் ஆய்வு செய்து வருகின்றது. ரோவரை தரையிறக்கும் முயற்சியில் தோல்வியடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# அலெக்ஸி நவல்னிக்கு மேலும் 19 வருட சிறை!

மொஸ்கோ, ஒக. 07

சிறையில் அடைக்கப்பட்டுள்ள ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னிக்கு 19 ஆண்டுகள் கூடுதல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஊழலுக்கு எதிரான தனது அறக்கட்டளை மூலமாக பணத்தை முறைகேடாக கையாடல் செய்தார் என்றுகூறி 2013ஆம் ஆண்டு அலெக்ஸி மீது வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கில் மொஸ்கோ நீதிமன்றம் கடந்த 2021ஆம் ஆண்டு அவருக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. தொடர்ந்து மோசடி மற்றும் நீதிமன்ற அவமதிப்பு ஆகிய குற்றங்களுக்காக அலெக்ஸி நவல்னிக்கு 9 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்து மொஸ்கோ நீதிமன்றம் கடந்த ஆண்டு உத்தரவிட்டது.

இந்த நிலையில் அவர் மீது பதிவு செய்யப்பட்ட பிற வழக்குகளான தீவிரவாதத்தை தூண்டுதல் மற்றும் நிதியளித்தல், சட்டவிரோத தன்னார்வ தொண்டு நிறுவனத்தை உருவாக்குதல், நாஜிக் கொள்கைகளுக்கு புத்துயிர் கொடுத்தல் மற்றும் ஆபத்தான செயல்களுக்கு குழந்தைகளை தூண்டுதல் உள்ளிட்ட ஆறு பிரிவுகளில் அவர் குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும் அவருக்கு கூடுதலாக 19 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக் கப்பட்டுள் ளது. இதன் மூலம் அவர் மொத் தம் 30 ஆண்டுகள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும்.

### யார் இந்த நவல்னி?

ரஷ்ய ஜனாதிபதி புடினையும் அவரின் அரசு ஊழலையும் கடுமையாக விமர்சித்து வந்தவர் எதிர்க்கட்சி தலைவர் அலெக்ஸி நவல்னி. ஜனாதிபதி தேர்தலின்போதும் தொடர் பிரசாரங்களில் ஈடுபட்ட அலெக்ஸி நவல்னிக்கு இளைஞர்கள் மத்தியில் பரவலான வரவேற்பு இருந்தது. ஆனால், புடின் அரசு அவர் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தி, அவரைத் தேர்தலில் போட்டியிட முடியாமல் செய்தது. இருந்தாலும் அலெக்ஸி நவல்னி பொதுவெளியில் தொடர்ந்து



புடின் அரசை விமர்சித்து வந்தார். இந்த நிலையில், கடந்த 2021 ஒகஸ்ட் டாம்ஸ்க் நகரிலிருந்து மொஸ்கோவுக்கு விமானத்தில் செல்லும்போது அலெக்ஸி மயங்கி விழுந்தார். இதனைத் தொடர்ந்து அவர் ஜேர்மனியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அலெக்ஸி நவல்னிக்கு விஷம் வைக்கப்பட்டிருப்பதை ஜேர்மனி அரசு உறுதிப்படுத்தியது. அவருக்கு விஷம் வைக்கப்பட்டதில் ரஷ்ய அரசுக்கு தொடர்பு இருப்பதற்கான ஆதாரம் கிடைத்துள்ளதாக ஜேர்மனி தெரிவித்தது. ஆனால், இந்தக் குற்றச்சாட்டை ரஷ்யா முற்றிலுமாக மறுத்தது. சிகிச்சைக்குப்பின் ரஷ்யா திரும்பிய அலெக்ஸி நவல்னி கைது செய்யப்பட்டார்.

# சீனாவில் தொடர் மழை; 10 பேர் பலி; 18 பேர் மாயம்!

## பல இலட்சம் பேர் இடப்பெயர்வு

பீஜிங், ஒக. 06

சீனாவின் வடக்கு மாகாணமான ஹெபெயில் பெய்து வரும் கனமழையால் 10 பேர் உயிரிழந்தனர். 18 பேர் காணாமல் போயுள்ளனர்.



நிலச்சரிவு மற்றும் வெள்ள அபாயம் காரணமாக சுமார் ஒரு கோடியே 15 இலட்சம் மக்கள் வாழும் இந்த மாகா ணத்தில் அரைவாசிக்கும் மேற் பட்டவர்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர்.

கடந்த வாரம் சீனாவை தாக்கிய டோக்சுரி புயல் 140 ஆண்டுகளில் இல்லாதளவுக்கு மோசமான மழையை கொண்டு வந்துள்ளது. இதனால், சீனா வின் பல இடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

வெள்ளத்தால் பல குடியிருப்புகள் நீரில் மூழ்கியுள்ளன. உட்கட்டமைப்புகள் பல அழி வடைந்துள்ளன.

இதேசமயம், கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் மோசமான வானிலை காரணமாக 142 பேர் இறந்தனர் என்று சீனாவின் அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது. (ஐ)




# ஓய்வை அறிவித்தார் அலெக்ஸ் ஹேல்ஸ்!

லண்டன், ஓக. 07

இங்கிலாந்து அணியின் அதிரடி தொடக்க ஆட்டக்காரரான அலெக்ஸ் ஹேல்ஸ் சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

அலெக்ஸ் ஹேல்ஸ் கடந்த 2011 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிராக மன்செஸ்டரில் நடைபெற்ற இருபது -20 போட்டியில் சர்வதேசப் போட்டிகளில் அறிமுகமானார்.

இங்கிலாந்து அணிக்காக அவர் 11 டெஸ்ட் போட்டிகள், 70 ஒருநாள் போட்டிகள் மற்றும் 75 இருபது -20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற உலகக் கிண்ண இருபது - 20 போட்டியில் இந்தியாவுக்கு எதிராக 47 பந்துகளில் 86 ஓட்டங்கள் அடித்து அசத்தியிருந்தார். ஓய்வு பெறுவதற்கு முன்னதாக அவரின் சிறப்பான ஆட்டம் இதுவாகும்.

தனது ஓய்வு முடிவு குறித்து இன்ஸ்ராகிராமில் அலெக்ஸ் ஹேல்ஸ் பதிவிட்டுள்ளதாவது:

அனைத்து வடிவிலான கிரிக்கெட் போட்டிகளிலும் எனது நாட்டுக்காக 156 போட்டிகளில் விளையாடியுள்ளதை மிகுந்த பெருமையாக கருதுகிறேன். இந்தப் பயணத்தில் எனக்கு நிறைய நினைவுகளும், நண்பர்களும் உள்ளனர். இந்த நினைவுகளும், நண்பர்களும் என் வாழ்நாளின் கடைசி வரை நிலைத்திருக்கும். ஓய்வு பெறுவதற்கு இதுதான் சரியான தருணம் என நினைக்கிறேன்” என்று கூறியுள்ளார்.

70 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள அலெக்ஸ் ஹேல்ஸ் 6 சதங்கள் மற்றும் 14 அரைச் சதங்களுடன் 2,419 ஓட்டங்கள் குவித்துள்ளார். 75 இருபது - 20 போட்டிகளில் ஒரு சதம் மற்றும் 12 அரைச் சதங்களுடன் 2,074 ஓட்டங்கள் குவித்துள்ளார். டெஸ்ட் போட்டியை பொறுத்தவரை 11 போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 5 அரைச் சதங்களுடன் 573 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

### மகளிர் உலகக் கிண்ண உதைபந்து

# ஸ்பெயின் அணி காலிறுதிக்கு தகுதி



மெல்பர்ன், ஓக. 07

ஸ்பெயின் அணி 5-1 என்ற கோல் கணக்கில் சுவிற்சர்லாந்து அணியை வீழ்த்தி காலிறுதி சுற்றுக்கு முன்னேறியது.

மகளிர் உதைப்நதாட்ட உலகக் கிண்ணத் தொடர் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் நடக்கிறது.

இதில் கலந்து கொண்ட 32 அணிகளில் இருந்து சுவிற்சர்லாந்து, ஸ்பெயின், ஜப்பான், நோர்வே, நெதர்லாந்து, தென்னாபிரிக்கா, சுவீடன், அமெரிக்கா, இங்கிலாந்து, நைஜீரியா, கொலம்பியா, ஜமைக்கா, அவுஸ்திரேலியா, டென்மார்க், பிரான்ஸ், மொராக்கோ ஆகிய 16 அணிகள் காலிறுதிக்கு முந்தைய 2ஆவது சுற்றுக்கு முன்னேறின.

இதில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் சுவிற்சர்லாந்து - ஸ்பெயின் அணிகள் மோதின. தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஸ்பெயின் அணி கோல் மழை பொழிந்தது. இறுதியில் ஸ்பெயின் அணி 5-1 என்ற கோல் கணக்கில் சுவிற்சர்லாந்து அணியை வீழ்த்தி முதல் அணியாக காலிறுதி சுற்றுக்கு முன்னேறியது. (ஐ)

### எல். பி. எல். இருபது - 20 :

# யாழ்ப்பாணம் அணியை வீழ்த்தியது கண்டி அணி!

கண்டி, ஓக. 07

யாழ்ப்பாணம் கிங்ஸ் அணிக்கு எதிரான போட்டியை 8 விக்கெட்களால் இலகுவாக வெற்றி கொண்டது பி லவ் கண்டி அணி.

எல். பி. எல். தொடரின் 9ஆவது போட்டி நேற்று முன்தினம் கண்டி பல்லேகலை மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 117 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அஞ்சலோ மெத்யூஸூம் சிறப்பாக பந்துவீசி யாழ்ப்பாணம் அணியின் ஆரம்ப வீரர்களான ரஹ்மானுல்லா குர்பாஸ் (0), சரித் அசலன்க (5) ஆகியோரை ஆட்டம் இழக்கச் செய்தார்.

மத்திய வரிசையில் வெல்லாலகே ஆட்டம் இழக்காமல் 38 ஓட்டங்களைப் பெற யாழ்ப்பாணம் அணி 100 ஓட்டங்களைக் கடக்க உதவினார்.

அவரை விட ப்ரியமல் பெரேரா (22), டேவிட் மில்லர் (21), தௌஹித் ஹ்ரிடோய் (15) ஆகிய மூவரே 10 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர்.

பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க 4 ஓவர்களில் 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் நுவன் ப்ரதீப் 36 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் அஞ்சலோ மெத்யூஸ் 8




ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

118 ஓட்டங்கள் என்ற சுமாரான இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பி லவ் கண்டி அதிரடியாக ஓட்டங்களைக் குவித்து 13 ஓவர்களில் 2 விக்கெட்களை மாத்திரம் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

பக்கார் ஷமான், தினேஷ் சந்திமால் ஆகிய இருவரும் 31 ஓட்டங்களைப் பகிர்ந்து நல்ல ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

தினேஷ் சந்திமால் 22 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்த பின்னர் பக்கார் ஷமானுடன் இணைந்த வனிந்து ஹசரங்க அதிரடியாக ஓட்டங்களைக் குவித்து 2ஆவது விக்கெட்டில் 36 பந்துகளில் 81 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை வெற்றியடையச் செய்தார்.

வனிந்து ஹசரங்க 22 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட ஆட்டம் இழக்காமல் 52 ஓட்டங்களைக் குவித்தார். பக்கார் ஸமான் 42 ஓட்டங்களைப் பெற்றார். (ஐ)

### எல். பி. எல். இருபது - 20 :

# கொழும்பு ஸ்ரைக்கர்ஸ் அணியை வெற்றி கொண்டது தம்புள்ளை!

கொழும்பு, ஓக. 07

கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் தம்புள்ளை ஔரா அணி 10 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

எல். பி. எல். தொடரின் 8ஆவது போட்டி நேற்று முன்தினம் கண்டி பல்லேகலை மைதானத்தில் நடைபெற்றது.



இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட தம்புள்ளை ஔரா 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 192 ஓட்டங்களைக் குவித்தது.

மொத்த எண்ணிக்கை 24 ஓட்டங்களாக இருந்தபோது ஆரம்ப வீரர் அவிஷ்க பெர்னாண்டோ (12) ஆட்டம் இழந்தார்.

ஆனால், குசல் மெண்டிஸ், சதீர சமரவிக்ரம ஆகிய இருவரும் 2ஆவது விக்கெட்டில் 120 ஓட்டங்களைப் பகிர்ந்து தம்புள்ளை ஔராவை பலப்படுத்தினர். லங்கா பிறீமியர் லீக் வரலாற்றில் பதிவான 2ஆவது விக்கெட்டுக்கான அதிகூடிய இணைப்பாட்டம் இதுவாகும்.

அதிரடியாக துடுப்பெடுத்தாடிய குசல் மெண்டிஸ் 46 பந்துகளில் 8 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகளுடன் 87 ஓட்டங்களையும் சதீர சமரவிக்ரம 35 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 59 ஓட்டங்களையும் பெற்றனர்.

தம்புள்ளை ஔரா அணியில் இரு வரிசை இலக்க ஓட்ட எண்ணிக்கையைப் பெற்ற நான்காவது வீரர் தனஞ்சய டி சில்வா ஆவார். அவர் 15 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் மதீஷ பத்திரண 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் நசீம் ஷா 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் 20 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

கொழும்பு அணி நிறைய விக்கெட்களைக் கையிருப்பில் கொண்டிருந்தபோதிலும் அதன் ஓட்ட வேகம் போதுமானதாக இல்லாததாலேயே இந்தப் போட்டியில் தோல்வி அடைந்தது.

9 ஓவர்கள் வரை அதன் ஓட்ட வேகம் கிட்டத்தட்ட 9 ஓட்டங்களாக இருந்தபோதிலும் பதும் நிஷங்க ஆட்டம் இழந்ததும் ஓட்ட வேகம் குறையத் தொடங்கியதால் அந்த அணியால் இலக்கை எட்ட முடியவில்லை.

18 ஓவர்கள் நிறைவில் கொழும்பு அணி 4 விக்கெட்களை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

கடைசி 2 ஓவர்களில் அதன் வெற்றிக்கு மேலும் 35 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஆனால், 19ஆவது ஓவரை ஹேடன் கேர் மிகத் துல்லியமாக வீசி 4 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து தம்புள்ளை ஔரா வெற்றிபெறுவதற்கு வழிவகுத்தார்.

கடைசி ஓவரில் சமிக கருணாரட்ன அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும், அவரால் அணியின் வெற்றியை உறுதிசெய்ய முடியாமல் போனது.

துடுப்பாட்டத்தில் நுவனிது பெர்னாண்டோ ஆட்டம் இழக்காமல் 56 ஓட்டங்களையும் பாபர் அஸாம் 41 ஓட்டங்களையும் பதும் நிஷங்க 22 ஓட்டங்களையும சாமிக கருணாரட்ன ஆட்டம் இழக்காமல் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நூர் அஹ்மத் 34 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார். (ஐ)

# இந்தியாவுடனான இருபது -20; அயர்லாந்து அணி அறிவிப்பு

டப்ளின், ஓக. 07

இந்திய கிரிக்கெட் அணி அயர்லாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடவுள்ளது.

இந்த தொடருக்கான இந்திய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. நீண்ட இடைவெளிக்கு பின்னர் அணிக்கு திரும்பிய பும்ரா அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இந்திய அணிக்கு எதிரான அயர்லாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு போல் ஸ்டிர்லிங் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அணி விவரம்: போல் ஸ்டிர்லிங் (தலைவர்), ஆண்ட்ரூ பால்பிர்னி, மார்க் அடேர், ராஸ் அடேர், கர்டிஸ் கேம்பர், கரேத் டெலானி, ஜார்ஜ் டோக்ரெல்,




பியோன் ஹேண்ட், ஜோஷ் லிட்டில், பேரி மெக்கார்த்தி, ஹாரி டெக்டர், லோர்கன் டக்கர், தியோ வான் வொர்காம், பென் ஒயிட், கிரேக் யங். (ஐ)

# மத்தள விமான நிலையத்தால் ரூ. 4 ஆயிரத்து 281 கோடி நட்டம்!

கொழும்பு, ஓக. 07

**2017 முதல் 2022 வரையிலான 5 ஆண்டுகளில் மத்தள சர்வதேச விமான நிலையம் 4 ஆயிரத்து 281 கோடி ரூபாய் நட்டமடைந்துள்ளது என்று தேசிய கணக்காய்வு பணிமனை வெளியிட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்துக்குக் கடந்த வருடம் மாத்திரம் 2 ஆயிரத்து 221 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தனியார் நிறுவனத்தின் கணக்காய்வுகள் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் விமான நிலையத்தின் செயல்பாட்டு செலவு 203 கோடி ரூபாய். இது அதன் இயக்க வருமானத்தை விட 26 மடங்கு அதிகம் என்றும் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மத்தள விமான நிலையத்தின் 2022ஆம் ஆண்டுக்கான வரிக்குப் பிந்திய நட்டம் 2 ஆயிரத்து 221 கோடி ரூபாவாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மத்தள விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 3 ஆயிரத்து 656 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. இதற்காக பெறப்பட்ட வெளிநாட்டு கடன் தொகை ஆயிரத்து 900 கோடி ரூபாயாகும். எவ்வாறாயினும், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தனியார் நிறுவனம் பெற்ற வெளிநாட்டு கடனுக்காக 2022 ஆம் ஆண்டு 184 கோடி ரூபாய் கடன் தவணை செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# உள்ளூராட்சிகளின் சேவை இணைய மயமாகின்றது!

கொழும்பு, ஓக. 07

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் வரி செலுத்துதல், கட்டட நிர்மாணப் பணிகளுக்கான அனுமதி வழங்கல் என்பவை இந்த ஆண்டு இறுதிக்குள் இணைய மயமாகும் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டம் ஏற்கனவே 69 உள்ளூராட்சி நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அந்த உள்ளூராட்சி நிறுவனங்களில் தற்போது இணையம் ஊடாக வரிகளை செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் உள்ளூராட்சி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், நிர்மாணத்துறைக்கு தேவையான அனுமதிகளையும் இணைய வழியில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மக்கள் எவ்வித அசௌகரியமும் இன்றி தமது கடமைகளை மேற்கொள்ளும் நோக்கில் இந்த புதிய வேலைத்திட்டம் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளதுடன், இவ்வருட இறுதிக்குள் நாடளாவிய ரீதியில் உள்ள 341 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. (ஐ)

# சாரதிகள் விடும் தவறை முறையிட புதிய செயலி

## இ. போ. ச. அறிமுகம் செய்கிறது

கொழும்பு, ஓக. 07

சாரதிகள் செய்யும் தவறுகளை தெரிவிப்பதற்காக விசேட செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இந்த செயலி மூலம் சாரதிகள் செய்யும் தவறுகளை நேரடியாக பயணிகள் தெரிவிக்க முடியும் என விபத்து விசாரணை முகாமையாளர் எரந்த பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை, சாரதிகள் செய்யும் தவறுகளை ஆவணப்படுத்தும் வகையில் சாரதியின் சோதனை புத்தகத்தை அறிமுகப்படுத்தவும் இலங்கை போக்குவரத்து சபை தீர்மானித்துள்ளது.

இதேசமயம், இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான சுமார் 218 பேருந்துகள் விபத்துகளில் சிக்கியுள்ளன. இந்த விபத்துகளில் 19 பேர் உயிரிழந்தனர் என்றும் எரந்த பெரேரா குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# சொக்லேட்டுக்குள் மனிதனின் பெருவிரல்!

கொழும்பு, ஓக. 07

“மகியங்கனை ஆதார மருத்துவமனையில் ஊழியர் ஒருவர் வாங்கிய உள்நாட்டில் தயாரான சொக்லேட்டில் மனிதனின் பெருவிரலின் ஒரு பகுதி இருந்தது கண்டறியப்பட்டது.

இது தொடர்பில் பொது சுகாதார பரிசோதகரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஆராய்ந்த சுகாதார அதிகாரிகள் தயாரிப்பு நிறுவனத்தின் சொக்லேட்களை பறிமுதல் செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, மருத்துவமனை ஊழியர் 3 நாட்களுக்கு முன்னர் குறித்த சொக் லேட்டை வாங்கியுள்ளார். ஒரு பகுதியை உண்ட அவர் மீதியை குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மீதியை அவர் சாப்பிட்டுள்ளார். சொக்லேட்டுக்குள் ஏதோ கடிபடுவதை உணர்ந்த அவர், அதனை நட்ஸ் என்று நினைத்து கடித்துள்ளார். பின்னர், அது நட்ஸ் அல்ல என்று உணர்ந்து அந்தப் பொருளை எடுத்து தண்ணீரில் அலசியுள்ளார். அப்போதே அது ஒரு மனிதனின் பெருவிரலின் பகுதி என்று அடையாளம் கண்டார்.

இதையடுத்து அவர் சத்தமிட்டுள்ளார். இதைத் தொடர்ந்து அவரின் குடும்பத்தவர்கள் மருத்துவமனை பணிப்பாளரின் கவனத்துக்கு இந்த விடயத்தை தெரிவித்தனர்.

இதைடுத்து அடுத்த கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய சொக்லேட் உற்பத்தி நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக மகியங்கனை பொது சுகாதார பரிசோதகர் இன்றைய தினம் நீதிமன்றில் அறிக்கையிடவுள்ளார். (ஐ)

# ஹெகலியவுக்கு எதிரான பிரேரணை பாராளுமன்ற ஒழுங்கு புத்தகத்தில்!

கொழும்பு, ஓக. 07

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை, பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் கூடுதல் சேர்க்கையாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான 45 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர். இதில் பல்வேறு எதிர்க்கட்சிகள் மற்றும் கூட்டணிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பி.க்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ் தேசிய மக்கள் முன்னனி, மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவின் சுதந்திர மக்கள் காங்கிரஸ் ஆகியவை இதில் அடங்கும். தற்போது எதிர்க்கட்சியில் சுயேச்சையாக செயல்படும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் குமார வெல்கம ஆகியோரும் இந்தப் பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளனர்.

தற்போது சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு இதுவரை தீர்வுகள் முன்வைக்கப்படவில்லை என பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிபுணர்களின் கருத்து என்னவென்றால், “மருத்துவமனைகளில் நாளுக்கு நாள் பதிவாகும் துக்ககரமான சம்பவங்களில் பெரும்பாலானவை தரமற்ற அல்லது தரம் குறைந்த மருந்துகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் இறப்புகள் மற்றும் குறைபாடுகள்” என்று அது மேலும் கூறுகிறது.

அரசமைப்பின் 27ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச கொள்கையின் வழிகாட்டல் கோட்பாடுகளுக்கு முரணாக இல்லாத வகையில், நாட்டிற்கு மருந்துகளை இறக்குமதி செய்யும் செயல்முறையை முறையாக ஒழுங்குபடுத்துவதில் சுகாதார அமைச்சர் புறக்கணித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மேலும் குற்றம் சுமத்துகின்றனர்.

“மக்களுக்குக் கிடைக்கும் பாதுகாப்பான சுகாதாரச் சேவையைப் பாழாக்கும் வகையில் அமைச்சர் செயல்பட்டுள்ளார்” என்று அந்த பிரேரணை கூறுகிறது. இதன் மூலம் அவர் அரசியலமைப்பின் 53வது பிரிவின்படி அவர் அளித்த உறுதிமொழியை மீறியுள்ளார்.

அரசியலமைப்பின் 28ஆவது பிரிவின்படி அமைச்சர் தனது அடிப்படைக் கடமைகளை புறக்கணித்துள்ளார் என்றும், “அவரது பொறுப்பற்ற நடத்தைக்கு மக்கள் தங்கள் உயிருக்கு விலை கொடுக்க வேண்டும்” என்றும் பிரேரணை கூறுகிறது.

பிரேரணையை விவாதிப்பதற்கான திகதிகள் எதுவும் இது வரை நிர்ணயிக்கப்படவில்லை. (ஐ)

# தொலைபேசி வயர்களை அறுத்து திருடியோர் கைது

கொழும்பு, ஓக. 07

சுமார் மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான தொலைபேசி வயர்களை அறுத்து அவற்றைக் களவாடிய சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிரியுல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முத்துகல சந்தியிலிருந்து பிஹல்பொல நோக்கி செல்லும் பிரதான வீதியில் உள்ள தொலைபேசி வயர்களை சந்தேகநபர்கள் அறுத்து திருடியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நாரம்மல பிரதேசத்தை சேர்ந்த 35 மற்றும் 59 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 2 ஆயிரம் விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்!

## பல்கலை ஆசிரியர் சங்க கூட்டமைப்பு

கொழும்பு, ஓக. 07

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பதிவு செய்யப்பட்ட தரவுகளின்படி, கடந்த ஒன்றரை வருடங்களில் கிட்டத்தட்ட 2 ஆயிரம் விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். மேலும் சிலர் கடந்த ஆறு மாதங்களில் சேவையை விட்டு வெளியேறியுள்ளனர் என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு பேராசிரியர் பரண ஜெயவர்த்தன தெரிவித்தார்.

நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் 11 ஆயிரத்து 900 விரிவுரையாளர்கள் இருக்க வேண்டும், ஆனால், 6 ஆயிரத் 600 பேர் மட்டுமே உள்ளனர். நாட்டை விட்டு வெளியேறிய பெரும்பாலான விரிவுரையாளர்கள் நாடு திரும்பவில்லை. இவர்களில் பெரும்பாலானோர் சேவையை விட்டு வெளியேறியதாக அந்தந்த பல்கலைக்கழகங்களுக்கு தெரிவிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

“2017ஆம் ஆண்டில் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் 30 ஆயிரம் புதிய மாணவர் சேர்க்கைகள் மட்டுமே நடந்துள்ளன. பின்னர், 2021 இல் 34 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டது. இது 2017 உடன் ஒப்பிடும்போது 50 சதவிகிதம் அதிகரித்துள்ளது. துரதிரஷ்டவசமாக, புதிய விரிவுரையாளர் நியமனங்களின் எண்ணிக்கை 2017இற்குப் பிறகு அதிகரிக்கவில்லை.

எனினும், கல்வி அமைச்சருடன் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. கலந்துரையாடலின் போது, தற்போதைய வரி விதிப்பால் விரிவுரையாளர்கள் மற்றும் மருத்துவர்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, விரிவுரையாளர்கள் மற்றும் மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர். மேலும், விரிவுரையாளர்களுக்கு சில நிவாரணங்களை வழங்குவதாக கடந்த மார்ச் மாதம் அரசாங்கம் உறுதியளித்த போதிலும் இதுவரையில் எதுவும் நடக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

துரதிர்ஷ்டவசமாக பொருளாதார வீழ்ச்சி காரணமாக புதிய விரிவுரையாளர்களை நியமிப்பதை அரசாங்கம் நிறுத்தியுள்ளது. ஆனால், கடந்த 6 மாதங்களில் நாட்டை விட்டு வெளியேறிய விரிவுரையாளர்களுக்கு பதிலாக புதிய நியமனங்களை வழங்குமாறு ஜனாதிபதி அந்தந்த அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், பிரச்னை என்னவென்றால், விரிவுரைகளை ஏற்கனவே உள்ள தொகுதிகளில் இருந்து தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு வெளிநாட்டு பயிற்சி தேவை. அவர்களுக்கு வெளிநாட்டு பயிற்சி அளிக்கப்பட்டால், அவர்கள் நாடு திரும்புவது சந்தேகம்,” என்றும் பேராசிரியர் கூறினார். (ஐ)

## மக்களின்...

வாட்ஸ் காற்று மின் சக்தி நிலையமே இவ்வாறு திறந்து வைக்கப்பட்டது.

இந்த மின் நிலையத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நறுவிலிக்குளம் கிராம மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அமைக்கப்பட்டுள்ள மின் கோபுரங்களால் தமது கடற்றொழில் பாதிக்கப்படுவதாகும் இரவு நேரத்தில் மின் நிலையத்திலிருந்து எழும் ஒலியால் தாங்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்தே அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

## காணி...

சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி செயலாளர் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அறிவித்திருந்தார்.

13ஆவது திருத்தம் தொடர்பில் ரெலோ, புளொட் என்பன தனித்தனியாக யோசனைகளை சமர்ப்பிக்காமல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக செயல்படும் 5 கட்சிகளுடனும் கலந்துரையாடி, கடிதம் அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழு கூட்டம் இணைய வழியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பான அபிப்பிராயத்தை ஜனாதிபதி கோரியுள்ளதால், அது தொடர்பில் மட்டும் குறிப்பிடுவதென தீர்மானிக்கப்பட்டது.

காணி, பொலிஸ், நிதி, நிர்வாகம் உள்ளிட்ட அனைத்து அதிகாரங்களுடனும் 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்த வேண்டும் என ஜனாதிபதிக்கு கடிதம் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, ஜனாதிபதி ரணில் பதவியேற்ற பின்னர் நடைபெற்ற சிங்கள ஆக்கிரமிப்பு, மத ஆக்கிரமிப்பு சம்பவங்களை பட்டியலிட்டும், பறாளாய் முருகன் கோயில் அரச மரத்தை உரிமை கோரும் முறையற்ற வர்த்தமானி உள்ளிட்ட - தமிழர்களின் தொல்லியல் சின்னங்களை அபகரிக்கும் வர்த்தமானிகளை மீளப்பெற வலியுறுத்தியும் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வருடத்தில்...

ஒவ்வொரு பாடத் தொகுதியின் முடிவிலும் மதிப்பீடு நடத்தப்பட்டு அதன் புள்ளிகள் கணினியில் பதிவு செய்யப்பட்டு வருட இறுதிப் பரீட்சையின் புள்ளிகளுடன் இணைக்கப்படும்.

வருங்காலத்தில், ஒரு தவணைக்கு ஒரு செயல்நூல் என மூன்று தவணைகளுக்கான செயல்நூல்கள் மூன்று பகுதிகளாக மாணவர்களுக்கு வழங்கப்படும்.

இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும்போது, தினமும் பாடசாலைக்கு சமுகமளிப்பதும் வகுப்பறையில் செயல்படுவதும் கட்டாயமாக்கப்படும். பிரத்தியேக வகுப்பு அல்லது மேலதிக வகுப்புகளுக்கு செல்ல வேண் டிய அவசியம் மாணவர்களுக்கு இருக் காது. இதனால் பிள்ளைகளை தேவை யற்ற போட்டிகளுக்காக தனியார் வகுப்புகளுக்கு அனுப்பி ஆயிரக் கணக்கில் பணத்தை செலவு செய்யத் தேவையில்லை.

தனியார் வகுப்புகளுக்கு செலவு செய்யும் பணத்தைப் பெற்றோர், பிள்ளைகளின் உணவுக்கு செலவு செய்யலாம். இதனால் இலவசக் கல்வியின் நோக்கம் பூர்த்தி செய்யப்படும்.

அத்துடன், இந்த முறையால் மாணவர்களின் புத்தகப்பை சுமையைக் குறைக்க எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் ஜெயவர்தனபுரவில் நடந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# மாகாண சபைகளுக்கான தேர்தலை இந்த ஆண்டுக்குள் நடத்த வேண்டும்!

## ஒன்றாக வலியுறுத்த கோருகிறார் தயான்

கொழும்பு,ஒக.07

தற்போது அரசியலில் உள்ள தென்னிலங்கை முற்போக்கு சக்திகளும் எதிர்க் கட்சிகளும் வடக்கு, கிழக்கு அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து ஆண்டு இறுதிக்குள் மாகாணங்களுக்கான தேர்தலை நடத்துமாறு ஏகோபித்த கோரிக்கை விடுப்பதே பொருத்தமான நடைமுறையாகும் - என்று இராஜதந்திரியும் அரசியல் விமர்சகருமான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்தார்.

13ஆவது திருத்த சட்ட நடைமுறை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கையில் நீண்ட வரலாற்றை கொண்டுள்ள தேசிய பிரச்னைக்கான தீர்வு விடயத்தில் கடந்தகால ஜனாதிபதிகள் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி இருக்கிறார்கள். ஆனால், அவை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டதாக இல்லை. இவ்வாறானதொரு சூழலில் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்த சட்டத்தை அமுல் படுத்துவது தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக அறிவித்திருக்கிறார்.

உண்மையில் தற்போதுள்ள யதார்த்த நிலைமையை புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலமானது ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்கு முன்னதான வருடமாகும். அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் வருடமாகும். ஆகவே, இந்த காலப்பகுதிகளில் பிரதானமான விடயங்களை முன்நகர்த்துவதும் நடைமுறை சாத்தியமாகுவதும் மிகவும் கடினமான விடயமாகும். இவ்வாறான நிலையில் வட, கிழக்கு தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் உட்பட எதிர்கட்சிகள் நடைமுறை சாத்தியமான விடயத்தை வலியுறுத்துவது பொருத்தமானதாகும்.

அந்த வகையில் தற்போதைய அரசியல் சூழலையும் புரிந்துகொள்ள வேண்டியது மிகவும் முக்கியமான தாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆணை பெற்று அதிகாரத்தில் உள்ள ஒருவர் அல்ல. அவர் தனிநபராகக் கூட மக்கள் ஆணை பெற்று பாராளுமன்றத்துக்கு வருகை தந்திருக்கும் நபரும் அல்ல. அவ்விதமான நிலையில் அவரால் பிரதானமான விடயங்களை முன்னெடுப்பது சாத்தியமற்றதாகும்.

இதனடிப்படையில் அவர் இந்தியாவுக்கான பயணத்தை நிறைவு செய்துள்ளார். இந்தப் பயணத்தின்போது திருகோணமலை நகரத்தை மையப் படுத்திய அபிவிருத்தி திட்டங்களில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதனைவிட தமிழ்நாட்டையும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்குரிய முதற்கட்ட நடவடிக்கைகளுக்கும் இணக்கத்தை ஏற்படுத்தியுள்ளார்.

இந்தப் பின்னணியில் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அவர் நடவடிக்கைகளை எடுப்பாராக இருந்தால் நிச்சயமாக தென்னிலங்கையில் அது பெரும் எதிர்ப்பு பிரசாரத்துக்கு வித்திடும். அதுமட்டுமன்றி ஜனாதிபதி ரணில் அடுத்த தேர்தலில் போட்டியிடுவதற்கு விருப்பை கொண்டிருக்கையில் சவால்கள் அதிகமுள்ள விவகாரத்தினை முழுமையாக முன்னெடுக்க முனைவது தனது வாக்குவங்கி அரசிலுக்கு பின்னடைவாக அமையும் என்பதிலும் கவனத்தைக் கொண்டிருப்பார்.

ஆகவே தற்போதைய சூழலில் நடைமுறைச் சாத்தியமான விடயத்தை முன்வைப்பதே பொருத்தமான அணுகுமுறையாகும். குறிப்பாக மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் சம்பந்தமாக நிபந்தனைகள் விதிப்பதை விடுத்து அவற்றுக்கான தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதியை வலியுறுத்துவதே பொருத்தமனது - என்றார். (ஐ)

## இலங்கையில்...

பக்கத்தில் அமித்ஷா வெளியிட்ட பதிவில்,

"காங்கிரஸ் மற்றும் தி. மு. கவின் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் ஆட்சிக்காலத்தில் தான் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை நடந்தது மற்றும் தமிழக கடற்றொழிலாளர்கள் பெரும் துன்பத்துக்கு ஆளானார்கள்", என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## மாகாண...

ஆணையாளர்கள் நடத்தும் இந்த ஆட்சி சட்டவிரோதமானது என பொல நறுவையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மகிந்த தேசப்பிரிய மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## அரசியல்...

பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியாது.

எனவே, அரசியல் தீர்வு விடயத்தில் வெளிநாடுகள் அழுத்தம் எதனையும் வழங்க முடியாது. எங்கள் பிரச்னைகளை நாங்களே தீர்த்துக்கொள்ள வேண்டும். இதை உணர்ந்து தமிழ்த் தலைவர்கள் செயல்பட வேண்டும்." - என்றார். (ஐ)

## மரத்திலேறியவர்...

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை முழங்காவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மிகிந்தலை விகாரையை இருளில் வைத்தது யார்?

## சஜித் பிரேமதாஸ கேள்வி



கொழும்பு, ஒக. 07

மின் துண்டிப்பை மேற்கொண்டு மிகிந்தலை விகாரையை ஒரு நாளாவது இருளில் வைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மேற்கொண்டது யார்? இது அரசமைப்பு மீறலாகும்.

புனித பூமியில் மின்சாரத்தை துண்டிக்கவும், தனியாருக்கு சொந்தமான வீடொன்றில் விழாவை நடத்தி மின் கட்டணம் செலுத்தாமல் அங்கு மின்சாரத்தை துண்டிக்காமல் இருக்கிறது.

ஏன் இந்த இரட்டை நிலைப்பாடு? இதற்கான காரணத்தை தேடிப்பார்க்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வரலாற்று சிறப்புமிக்க மிகிந்தலை விகாரைக்கு சென்றிருந்தபோது , மிகிந்தலை விகாரையின் மின் பட்டியலை செலுத்தியமை தொடர்பில் மிகிந்தலை விகாராதிபதியுடன் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

மிகிந்தலை விகாரையின் மின் துண்டிப்புக்கு எம்மால் தற்காலிகமான தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில்நாம் மகிழ்ச்சியடைகிறோம். அதே போன்று பெருமையடைகிறோம். இருப்பினும் இது ஸ்திரமான, நிலையான தீர்வாக கருத முடியாது.

ஆட்சியாளர்கள் தொடர்பில் நாட்டு மக்களிடத்தில் நம்பிக்கை இல்லாமல் போயுள்ளது. எதிர்க்கட்சிகள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புகள் வரையறுக்கப்பட்டவை.

இருப்பினும் எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்து கொண்டு நாட்டுக்கு தேவையான எம்மால் முடியுமான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து செல்கிறோம். இதனை நாம் பல தடவைகள் நிரூப்பித்து காட்டியுள்ளோம் - என்றார்.

# பாகிஸ்தான் உருப்படாது!

## இம்ரான் கானுக்காக குரல் எழுப்பும் மனோ



கொழும்பு, ஒக. 07

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டுள்ள நிலையில், அவ்விவகாரம் தொர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் முகநூலில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இம்ரான் கானுக்கு மூன்றாண்டு சிறை. ஐந்தாண்டு அரசியல் இல்லை. ஆரம்பத்திலிருந்தே அவரை அரசியலிலிருந்து அகற்ற அவசரம் காட்டினார்கள்.

இந்த நாடு உருப்படவே படாது. வளராது தேய்ந்தே போயிடும்.

நல்லவேளை வங்காளதேசம் பிரிந்து, இன்று வளருகின்றது. இல்லாவிட்டால் வங்காளதேசிகளும் தேய்பிறையாக தேய்ந்து போயிருப்பர்" - என்றுள்ளது.

தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சியின் தலைவரும் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமருமான இம்ரான் கானுக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

அத்துடன், 5 ஆண்டுகள் தகுதி நீக்கம் மற்றும் ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்தும் பாகிஸ்தான் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. நேற்று அவர் கைது செய்யப்பட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களை ஏமாற்றுகிறார்!

## அநுரகுமார திஸநாயக்க



கொழும்பு, ஒக. 07

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்பொழுது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான நாடகத்தையே சர்வ கட்சி கூட்டத்தை மையப்படுத்தி முன்னெடுத்து வருகிறார். இதற்கு நாம் துணை போக முடியாது. 13ஆவது திருத்த சட்டம் சம்பந்தமாக அரசாங்கம் தனது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்துகின்ற போது அது சம்பந்தமான பரிந்துரைகளை செய்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்பதை தவிர்த்துள்ள மக்கள் விடுதலை முன்னணி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமான பரிந்துரைகளையும், முன்மொழிவுகளையும் முன்வைக்கும் கோரிக் கைக்கு பதிலளிக்குமா என்று வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலை மையப்படுத்தியே அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகிறார்.

அதன் ஓர் அங்கமாகவே சர்வ கட்சி மாநாட்டை கூட்டி தமிழ் மக்களுக்கு அதிகாரங்களை வழங்க போவதாகவும் அதற்கு அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவையும் கோருவதாகவும் தெரிவிக்கின்றார்.

அந்த வகையில் 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக அரசியல் கட்சிகளின் யோசனைகளை அவர் தற்போது கோருகின்றார். ஆனால், அரசாங்கம் இந்த விடயத்தில் என்ன நிலைபாட்டை கொண்டிருக்கின்றது என்பது பகிரங்கப்படுத்தப்படவில்லை. அரசாங்கத்துக்குள் இந்த விடயம் சம்பந்தமாக முரண்பாடான நிலைமைகள் இருக்கின்றன. அது பகிரங்கமான விடயம்.

அவ்வாறிருக்கையில் எதிர்க் கட்சிகளிடமே ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார். எம்மை பொறுத்தவரையில் 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக அரசாங்கம் தனது நிலைப்பாட்டை பகிரங்கப் படுத்துகின்ற பொழுது நாம் எமது பரிந்துரைகளையும் கருத்துகளையும் முன்வைப்பதற்கு தயாராக இருக்கிறோம். அதனை விடுத்து ஜனாதிபதியின் ஏமாற்று நாடகங்களுக்கு நாம் துணை போகப் போவதில்லை - என்றார். (ஐ)

## 13 நடைமுறைப்படுத்தப்படுவதால் மலையகத்துக்கு நன்மையில்லை!

### பழனி திகாம்பரம் எம். பி.



கொழும்பு, ஒக. 07

13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதால் மலையகத்தில் எந்தவொரு நன்மையும் ஏற்படப் போவதில்லை என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் வானொலி ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், 13 ஆம் திருத்தத்தின் ஊடாக மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்குவதால் எந்த பிரச்னையும் ஏற்படாது என்றும் அவர் கூறினார். (ஐ)

# சகல மலையக எம்.பிக்களையும் ஒன்றாக சந்திக்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஒக. 07

அனைத்து மலையக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஒரே தடவையில் சந்தித்து பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமானால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரமே இதற்கான இணக்கப்பாட்டை ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மலையக பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டுக்காக 300 கோடி ரூபாயை வழங்குவதற்கு இந்திய அரசு முன்வந்துள்ளது.

எனவே, இந்த நிதியை எந்தெந்த திட்டங்களுக்கு பயன்படுத்த வேண்டும், இது தொடர்பான கட்சிகளின் யோசனைகள் என்ன என்பன உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடவே இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என தெரியவருகின்றது.

மலையகத்துக்கான முக்கியத்துவமிக்க அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது மக்கள் பிரதிநிதிகளை அரவணைத்துக்கொண்டு, அவர்களின் ஆலோசனைகளையும் உள்வாங்கி செயல்படவே அமைச்சர் ஜீவன் தொண்டமான் எதிர்பார்க்கின்றார். இதற்கான அழைப்பையும் அவர் ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மலையக மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் பாராளுமன்றத்தில் 9 தமிழ் எம். பிக்கள் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எட்டாம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
குவேனி மங்களேஸ்வரன்
(ராசாத்தி)

யாழ்.நெல்லியடியை பிறப்பிடமாகவும் சுவிற்ஸர்லாந்து Luzern மாநிலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி **குவேனி மங்களேஸ்வரன் (ராசாத்தி)** அவர்கள் கடந்த 30.07.2023 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த செய்தியறிந்து, நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசி, முகநூல், மின்னஞ்சல் ஊடாக எமக்கு ஆறுதல் தெரிவித்து – எமது துயரில் பங்கெடுத்தவர்களுக்கும் 03.08.2023 வியாழனன்று சுவிஸில் நடைபெற்ற அன்னாரது இறுதி நிகழ்வில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**திருமதி பார்வதி சிவஞானம்
குடும்பத்தினர்**
(Family of late Mr Vallipuram Sivagnanam - Nelliyadi, Karaveddy)
parwathy.london@gmail.com

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.